SURESH' IAS ACADEMY

ARISE AWAKE ACHIEVE

**13th TEST**

Marks : 300

Time : 3 Hrs

# TARGETING TNPSC GROUP-II 2023

## QUESTION WITH SIMPLIFIED ANSWER

## அறிவியல் & தொழில்நுட்பம்



**MAINS WRITTEN EXAM**

- அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி அரசின் கொள்கைகள்
- அறிவியல் தொழில்நுட்பத்தின் பங்கு, சாதனைகள், தாக்கங்கள்
- ஆற்றல் தன்னிறைவு
- எண்ணெய் கண்டுபிடிப்பு
- மரபியல் - மரபுப் பண்பு குறித்த அறிவியல்

தமிழ் வழி


| THOOTHUKUDI | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI |
|---|---|---|---|---|
| 0461 - 4000970<br>99445 11344 | 0462 - 2560123<br>98942 41422 | 04567 355922<br>75503 52916 | 0452 - 2383777<br>98431 10566 | 97555 52003<br>97555 52009 |

TEST 13 வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key - Tamil

அலகு - 1

**1) சிறு குறிப்பு வரைக.**

**a) NIOT**

**b) அண்டார்டிகா மற்றும் கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையம்**

**a) NIOT** 1

- விரிவாக்கம் : தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம்
- உருவாக்கம் : 1993
- அந்தஸ்து : இந்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின்கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும்
- தலைமையகம் : சென்னை, தமிழ்நாடு
- நோக்கம் : இந்திய நிலப்பகுதிகளில் மூன்றில் இரண்டு பங்கு உள்ள இந்திய பொருளாதார மண்டலங்களின் வளங்களை பயன்படுத்துவதில் உள்ள பொறியியல் சார்ந்த சிக்கல்களை களைவதற்கு முழுவதும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதாகும்.

**NIOT இன் இலக்கு** 1

- பெருங்கடல் வளங்களை நிலையாக பயன்படுத்துவதற்காக நடவடிக்கைகளை உலகத்தர தொழில்நுட்பத்தின் மூலம் மேம்படுத்துதல்
- பெருங்கடலின் செயலாற்றும் நிறுவனங்களுக்கு மதிப்புக்கூட்டப்பட்ட சேவைகள், போட்டித்தன்மை ஆகியவற்றை உருவாக்குகிறது.
- பெருங்கடல் வளம் மற்றும் சுற்றுச்சூழலை பராமரிப்பதற்கான நிறுவனங்களின் தகுதிகளை அறிவுசார்ந்த முறையில் மேம்படுத்துகிறது.

**NIOT இன் சமீபத்திய மேம்பாடுகள்** 1

- கடற்கரையில் வாழும் மக்களுக்காக உப்புநீரின் மூலம் எரியக்கூடிய LED பல்புகளை உருவாக்குகிறது.
- இந்தியாவின் முதல் கடல்நீரை கொண்டு மின்னாற்றல் பெற்று எரியக்கூடிய உப்புநீர் விளக்கிற்கு ரோஷினி என்று பெயரிடப்பட்டுள்ளது.
- அயனியாதல் மூலம் மின்னாற்றல் உருவாக்கப்படுகிறது.
- 7500 கிமீ தொலைவு கொண்ட இந்திய கடற்கரைப் பகுதிகளில் வாழும் மீனவர்களுக்கு இது பெரிதும் உதவுகிறது.

**b) அண்டார்டிகா மற்றும் கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையம்** 1

- ஆண்டு : 1998
- தற்போதைய பெயர் : தேசிய துருவ மற்றும் கடல் ஆராய்ச்சிக்கான மையம்

**செயல்பாடுகள் :**

- துருவ மற்றும் கடல் அறிவியல் ஆராய்ச்சிக்கான முன்னோக்கியப் பங்கினை கொண்டுள்ளது. 2
- புவி அறிவியல் கணக்கெடுப்பு மற்றும் அரேபிய கடல்பகுதிகளின் ஆழ்கடல் துளையிடுதல், வாயு மற்றும் பல கனிம சல்பைடுகளை அகழ்ந்து எடுத்தல் மற்றும் உயிரற்ற வளங்களை பயன்படுத்துதல் ஆகிய செயல்பாடுகளை இந்தியப் பொருளாதார மண்டலத்தின் சர்வதேச கடல் கண்டுபிடிப்பு நிகழ்வின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது.
- அண்டார்டிகா, ஆர்க்டிக் மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் உள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளால் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.
- ஆர்க்டிக், அண்டார்டிக் மற்றும் தெற்கு கடல் பகுதிகளில் ஆராய்ச்சிக்கான ஆண்டு செலவுகளை அனைத்து அறிவியல் செயல்பாடுகளை உட்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது.
- மைத்ரீ, பாரதி மற்றும் ஹிமாத்ரி ஆகிய ஆய்வு நிலையங்கள் பராமரிக்கப்படுகின்றன.
- ஓஆர்வி, சாகர்கன்னியா உள்ளடக்கிய நடவடிக்கைகளை புவி அறிவியல் அமைச்சகம் மேற்பார்வை செய்கிறது.

**2) கீழ்க்கண்ட தமிழ்நாட்டில் உள்ள அமைப்புகள் பற்றி சிறு குறிப்பை எழுதவும்:**

**a) கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் (CSIR - SERC)**

**b) போர் ஊர்தி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம்(CVRDE)**

**a) கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் (CSIR - SERC)** 1

- அறிவியல் மற்றும் தொழிற்சாலை ஆராய்ச்சி சபையின்கீழ் இயங்கும் ஒரு தேசிய ஆய்வுக்கூடமாகும்.
- இடம் : சென்னை

**ஆய்வுப்பகுதி** 1

- கட்டமைப்பு பொறியியல் நடவடிக்கைகளான பேரிடர் தணிப்பு அதிர்வை உள்வாங்குதல் முதலிய கட்டமைப்பு நடவடிக்கைகளாகும்.
- வடிவமைப்பு மற்றும் கட்டமைப்பு மீட்டுருவாக்கம் உள்ளிட்ட கட்டமைப்பு பொறியியலின் அத்தனை பரிமாணங்களின் உள்ள செயல்பாடு அடிப்படையிலான ஆராய்ச்சியை மேற்கொள்கிறது.
- வடிவமைப்பு ஆலோசனை சேவைகள் ஆகியவற்றின் ஆவண பரிசோதனை மற்றும் பல்வேறு வடிவமைப்புகளை தனியார் மற்றும் பொதுத்துறைகளை மேம்படுத்தும் விதமான சேவைகள் வழங்கப்படுகிறது.

SURESH'

<u>நெருக்கடி கால மீட்டெடுப்பு அமைப்பு</u> 1

- நிலச்சரிவு, நிலநடுக்கம் மற்றும் புயல் காரணமாக கோபுரங்களில் ஏற்படும் விபத்துக்களால் நிகழும் ஆற்றல் இழப்பை விரைவில் மீட்டுருவாக்கம் செய்வதற்கான அமைப்பினை மேம்படுத்துகிறது.
- பேரிடர் காலங்களில் ஏற்படும் ஆற்றல் இழப்பு ஆகியவற்றை கட்டுப்படுத்துகிறது.
- மேலும் மீட்டெடுப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துகிறது.

**b) <u>போர் ஊர்தி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம்(CVRDE)</u>** 2

- இந்நிறுவனம் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் இயங்கி வருகிறது.
- ஆள் உள்ள மற்றும் ஆளில்லா போர் வாகனங்கள் மற்றும் போர் விமானங்கள் ஆகியவற்றின் மேம்பாடு மற்றும் மறுஉருவாக்கம் ஆகியவற்றை மேற்கொள்கிறது.

**<u>உருவாக்கம் :</u>**

- 1965ஆம் ஆண்டு சுதந்திரமாக பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தால் நிறுவப்பட்டது.
- கனரக தொழிற்சாலை, ஆவடியில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான தொழிற்சாலை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- அகமதுநகரில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான நிறுவனம் நிறுவப்பட்டு 1967ஆம் ஆண்டு VRDE என்று பெயரிடப்பட்டது.
- 1969 வரை நிலையான வளர்ச்சியுடன் செயல்பட்டது.- அதன் பின்பு ஒரு சுதந்திரமான நிறுவனமாக போர் ஊர்தி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பாக 26 மார்ச் 1975 முதல் செயல்பட துவங்கியது.

**<u>செயல்பாடுகள்</u>**

**<u>வடிவமைப்பு மற்றும் மேம்பாடு</u>** 1

- ஆளில்லா திட்டங்களுக்கான வாகனங்கள்
- குறைவாக பயன்படுத்தக்கூடிய போர் விமானங்கள் முதலியன
- போர் தளவாடங்கள் குண்டு கட்டுப்பாட்டு அமைப்புகள்
- நெருப்பு கட்டுப்பாட்டு அமைப்புகள்
- மின்னணு மற்றும் மின்னியல் அமைப்புகள்
- சிறு கோபுரங்கள், மையங்கள் மற்றும் எந்திர அமைப்புகள் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு உதவுகிறது.
- ஒருங்கிணைந்த முறையில் போர் தளவாட வாகனங்கள் மற்றும் அவற்றின் ஆய்வுகள் ஆகியவற்றை மேற்கொள்கிறது.

**3) நீர் மேலாண்மையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாடுகளை விளக்குக.**

**<u>நீர் மேலாண்மையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள்</u>**

- 2021இல் வெளியிடப்பட்ட நிதி ஆயோக் அறிக்கையின்படி 74% வீடுகள் இன்னும் குடிநீர் வசதியினைப் பெறவில்லை,
- ஊரகப் பகுதிகளில் உள்ள 84% வீடுகள் இன்னும் குழாய் வசதியினைப் பெறவில்லை.

<u>அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பங்குகள்</u> 5

- **புவித்தகவல் அமைப்பின் மூலம் நிலத்தடி நீர்வளம் பராமரிக்கப்படுகிறது :** ஊரகப் பகுதிகளில் உள்ள நீர்வளம் பற்றி அறிய உதவுகிறது.
- **செயற்கை நுண்ணறிவு நிலத்தடி நீரை பராமரிக்க உதவுகிறது :** நீர்ப்படுகையின் குறைவு ஆகியவற்றை அறிய உதவுகிறது.
- **அயனி மற்றும் மின்னியல் முறையில் வடிகட்டுதல் :** வெளியேற்றும் குழாய்களில் உயிரி மற்றும் உயிரற்ற மாசுகள் வடிகட்டப்படுகின்றன.
- மாடிகளில் மழைநீர் சேகரிப்பு
- **<u>நவீன தீர்வுகாணும் முறைகள்</u> :** புதிதாக கட்டப்பட்ட கான்கிரீட் அமைப்புகளின் மாசுக்களை தவிர்ப்பதற்காக சிறப்பு வகையான நெகிழித்துகள்கள் பயன்படுத்தப்படுகிறது.
- **<u>உப்புநீக்க நிலையங்கள்</u> :** உப்பு நீரை தெளிந்த நீராக மாற்றுவதற்கு பல்வேறு தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**<u>முன்னெடுப்பு நடவடிக்கைகள்</u>** 1

- தொடர் நீர் விநியோகத்தை உறுதிசெய்யும் விதமாக பல்வேறு ஆறுகளை தொழில்நுட்பத்தை மீட்கும் முயற்சியினை அரசின் ஜல் சக்தி அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.
- மாநிலத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நிலத்தடி நீர் வளத்தினை நீர்ப்பாதுகாப்பிற்கான விண்வெளி அறிவியல் அமைப்பு உறுதி செய்கிறது.

**4) தொழில்நுட்ப பயனர்களுக்கு மெய்நிகர் தொழில்நுட்பத்தை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் தொழில்நுட்பம் பற்றி விவரி?**

**<u>மெட்டாவெர்ஸ்</u>** 2

- பயனாளர்களை அடுத்தகட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் மெய்நிகர் தொழில்நுட்பம் இதில் பயன்படுத்தப்படுகிறது.
- இதன்மூலம் ஒருவர் செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒரு உலகத்திற்குள் செல்லலாம்.
- அந்த உலகத்தை நேரடியாகக் காணக்கூடிய அனுபவத்தை அளிக்கும்படி நம் மூளை இயங்கும்.
- இத்தொழில்நுட்பத்தின் மூலம் நாம் வேறு ஒரு உலகத்தில் இருப்பதாக நம் கண்கள் நம்மை நம்ப வைக்கிறது.
- இத்தொழில்நுட்பம் பற்றி விவரிப்பதைவிட அனுபவத்தின்மூலம் அறிவதை சிறந்ததாகும்.

<u>மெட்டாவெர்ஸ்க்கு பின் உள்ள உந்து காரணிகள்</u> 3

- இதற்கு இணைய இணைப்பு மெய்நிகர் சாதனங்கள், முப்பரிமாண படங்கள் ஆகியவற்றில் மேற்கொண்ட மேம்பாடு இத்திட்டத்திற்கு வழிவகுத்தது.
- இத்தளத்தில் முகநூல், அடோப், மைக்ரோசாப்ட் உள்ளிட்ட அனைத்தும் வேலை செய்கின்றன.
- அதிவேக இணையத்தின் மூலம் 5ஜி வலைப்பின்னலானது நடைமுறைக்கு வந்தது.
- இதன்மூலம் பயணத்தின் போதும் கிரிக்கெட் உள்ளிட்ட நேரடி நிகழ்வுகளை எங்கிருந்தும் கண்டுகளிக்க முடிகிறது.

SURESH

**மெட்டாவெர்ஸின் பயன்கள்**

- பொழுதுபோக்கு, உற்பத்தி, சுகாதாரம், விளையாட்டு, பயிற்சி உள்ளிட்ட செயல்பாடுகளில் மெய்நிகர் மற்றும் நேரடி நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு அனுபவமாக கிடைக்கப்படுகிறது.
- நேராக மற்றும் மெய்நிகர் உலகில் உள்ள இரு நிகழ்வுகளையும் ஒன்றிணைத்து காட்டக்கூடிய இத்தொழில்நுட்பத்திறன் பாராட்டுக்குரியது.
- எடுத்துக்காட்டு : மருத்துவரை காண மருத்துவமனைக்கு செல்ல இயலாத நோயாளிகள் வீட்டில் இருந்தபடியே மருத்துவரிடம் ஆலோசனைகள் பெறலாம்.
- யோகா மற்றும் நடன வகுப்புகள் இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நடக்கிறது.
- பிளாக்செயின் வாய்ப்புகள் உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் இந்த முப்பரிமாண மெய்நிகர் தொழில்நுட்பத்தை எதிர்நோக்குகின்றன.

**சுற்றுச்சூழலின் மீதான நேர்மறை தாக்கங்கள்** 1

- அதிகமான மக்கள் இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் பொழுது பயணத்திற்கான தேவை குறைக்கப்படுகிறது.
- இதன்மூலம் போக்குவரத்து நெரிசல் குறைக்கப்படும்பொழுது வாகன புகைகள் குறைக்கப்பட்டு, இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுகிறது.

**5) ஒளி இழைத் தகவல் தொடர்பு பற்றி விளக்குக**

**ஒளி இழைத் தகவல் தொடர்பு** 2

- போட்டோ டையோடுகளால் கண்டறியக்கூடிய லேசர் மற்றும் LEDகளின் ஒரு ஒத்திசைவான வெளிச்சத்தை உருவாக்குகிறது.
- ஒளியை கடத்துவதற்காக இத்தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.
- கண்ணாடி மற்றும் நெகிழியால் உருவாக்கப்பட்ட மெல்லிய கம்பி போன்ற அமைப்பு இதற்கு பயன்படுத்தப்படுகிறது.
- இதன் வழியாக ஒளி ஆற்றல் பயணித்து, இலக்கினை அடைகிறது.
- உள்பிரதிபலிப்பு அடிப்படையில் இத்தொழில்நுட்பத்தின் ஒளியானது பரிமாறப்படுகிறது.

**நன்மைகள்** 2

- ஒளி ஆற்றல்கள் கடத்தப்படும்பொழுது குறைவான இலக்கினை அடைகிறது.
- செம்பினால் ஆன வயர்களுக்கு இணையாக குறைவான எடை கொண்டு விளங்குகிறது.
- அதிகப்படியான தகவல்கள் ஒளிஇழை தகவல் தொடர்பு மூலம் பரிமாறப்படுகிறது.
- அதிகபட்சமாக நொடிக்கு 10 ஜிகாபைட் அளவு பரிமாற்றம் நிகழ்கிறது.
- ஒளிப்பரிமாற்றத்தில் மின்னணு முறையில் எந்த இடையூறும் ஏற்படுவதில்லை.

**பயன்பாடுகள்** 2

- தொலைபேசிகள், காணொலி அழைப்புகள், குறுஞ்செய்தி சேவைகள் மற்றும் தரவு வலைப்பின்னல்கள் உள்ளிட்ட செயல்பாடுகள் இதன்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.
- தொழில்நுட்பம் 5ஜி வலைப்பின்னலுக்கு ஏற்றதாகும்.

**சவால்கள்**

- அதிகம் உடையக்கூடிய தன்மை கொண்டதாக விளங்குகிறது.
- அதிக செலவை ஏற்படுத்தக்கூடிய தொழில்நுட்பமாக திகழ்கிறது.

**6) GPS என்றால் என்ன? அதன் பயன்பாடுகளை குறிப்பிடுக.**

**புவியிடங்காட்டி** 3

- இத்தொழில்நுட்பத்தில் இட விபரம் மற்றும் நேரம் ஆகிய தகவல்கள் கிடைக்கப் பெறுகிறது.
- இத்தொழில்நுட்பம் செயற்கைக்கோள் வலைப் பின்னலின் உதவியுடன் செயல்படுகிறது.
- சாதாரண ரேடியோ அலைகளைப் போன்ற அலைவரிசைகள் மூலம் இச்செயற்கைக்கோள்கள் தொடர்பு கொள்கின்றன.
- செயற்கைக்கோள்களிலிருந்துபெறப்பட்ட அலைவரிசை தகவல்களை மாற்றம் செய்வதற்காக சிறப்பு புவியிடங்காட்டி மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது.
- இந்த மென்பொருளின் மூலம் செயற்கைக்கோளின் இருப்பிடம் தகவல் பரிமாற்றத்திற்கு எடுத்துக்கொள்ளும் நேரம் ஆகியவை கணக்கிடப்படுகிறது.

**பயன்பாடுகள்** 3

புவியிடங்காட்டி பல்வேறு துறைகளில் பயன்பாட்டில் உள்ளது. அவை,

- கடற்படை வாகன பராமரிப்பு
- வனவிலங்கு பராமரிப்பு
- பொறியியல் நடவடிக்கைகள்
- வானிலை அறிக்கை, பேரழிவுகளை முன்னறிதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- வங்கி சார்ந்த நடவடிக்கைகள், அலைபேசி செயல்பாடுகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவற்றின் துல்லியத்தன்மையுடன் புவியிடங்காட்டி செயல்படுகிறது.

**7) E20 என்றால் என்ன? அதன் நன்மைகள் யாவை?**

- பெட்ரோலில் எத்தனாலின் கலப்பு 20%ஆக மேற்கொள்ளப்படுவதை இந்திய அரசு இலக்காக நிர்ணயித்துள்ளது. 2
- தற்போது இந்தியாவில் பெட்ரோலில் 8.5% கலக்கப்பட்டு வருகிறது.
- 2025க்குள் எத்தனாலின் கலப்பு விகிதமானது 20%ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் ஏப்ரல் 01, 2023 முதல் நடைமுறைக்கு வந்தது.

**20% எத்தனால் கலப்பில் உள்ள நன்மைகள்** 4

- வருடத்திற்கு அந்நிய செலாவணி பரிமாற்றமாக ரூ30000 கோடி சேமிக்கப்படுகிறது.
- ஆண்டு சேமிப்பாக 4 பில்லியன் அளவிலான அமெரிக்க டாலர் எதிர்பார்க்கப்படுகிறது.
- எத்தனால் கலப்பு புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பயன்பாட்டை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இதன் மூலம் உலகத்தின மூன்றாவது மிகப்பெரிய எண்ணெய் இறக்குமதியாளர் மற்றும் நுகர்வோர் என்ற நிலையில் மாற்றம் ஏற்படும்.

SURESH

- பாதிப்படைந்த உணவுப் பயிர்கள் மற்றும் உபரி அரிசிகள் ஆகியவை எத்தனால் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகிறது.
- ஆற்றல் பாதுகாப்பை அதிகரிக்கிறது.
- கார்பன் வெளியீட்டை குறைக்கிறது.
- காற்று தரத்தை அதிகரிக்கிறது.
- நம்பகத்தன்மை வாய்ந்தது.
- விவசாயிகளின் வருவாயை அதிகரித்து அதிக முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குகிறது.

**8) தூய ஆற்றலுக்கும் பசுமை ஆற்றலுக்கும் உள்ள வேறுபாடுகளை பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் எடுத்துரைக்கவும்**

**பசுமை ஆற்றல்** 1

- புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் துணையாக இது விளங்குகிறது.
- சூரிய ஒளி, காற்று, வெப்பம் மற்றும் நீரினை உள்ளடக்கிய சுற்றுச்சூழல் வளங்களை முன்னிறுத்துகிறது.
- குறைவான பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய நீர்மின் வளங்கள் மற்றும் சிறப்பு வகையான உயிரி எரிபொருள்கள் ஆகியவற்றை முன்னிறுத்துகிறது.
- எடுத்துக்காட்டு : சூரிய ஆற்றல், காற்று ஆற்றல்
- கார்பன் உமிழ்வுகளை குறைத்து சுற்றுச்சூழலின் மீது குறைவான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

**தூய ஆற்றல்** 1

- உமிழ்வுகள் அற்றது ஆனால் புதுப்பிக்கத்தக்கது அல்ல
- அனைத்து பசுமை ஆற்றலும் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலும் தூய ஆற்றலாக விளங்குகிறது.
- அணு ஆற்றல் எந்தவிதமான உமிழ்வுகளையும் மாசுபடுத்திகளையும் வெளியிடுவதில்லை.
- உயிரிப் பொருட்களால் உருவாக்கப்பட்ட உயிரி வாயு, வீட்டுக் கழிவுகளால் உருவாக்கப்பட்ட தூய ஆற்றல் ஆகிய அனைத்தும் புதுப்பிக்கத்தக்கது அல்ல.
- அனைத்து தூய ஆற்றல் வளங்களும் புதைபடிவ எரிபொருட்களின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை ஏற்படுத்துகிறது.
- இவை பசுமை இல்ல வாயுக்களை உருவாக்குவது இல்லை.
- தூய ஆற்றல்கள் உயிரி எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளுக்கான ஒரே தீர்வாக அமைகிறது.

**வேறுபாடுகள்**

| அளவுருக்கள் | பசுமை ஆற்றல் | தூய ஆற்றல் 4 |
|---|---|---|
| புதுப்பிக்கத்தக்கவை | குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் நன்மைகளைக் கொண்டுள்ளது. | குறைவான உமிழ்வுகளை கொண்டது. புதுப்பிக்கத்தக்கது அல்ல. |
| ஆற்றல் மூலங்கள் | சூரியன், காற்று மற்றும் நீர் போன்ற இயற்கை மூலங்களிலிருந்து பெறப்பட்டது | சுற்றுச்சூழலைப் பாதிக்காத ஒரு ஆற்றலாக விவரிக்கப்படுகிறது. |
| சுற்றுச்சூழலின் மீதான தாக்கம் | கார்பன் டை ஆக்சைடை வெளியிடாமல் குறைவான சுற்றுச்சூழல் தாக்கம் கொண்டது. | கார்பன் உமிழ்வுகளை வெளியிடாத 100% புதுப்பிக்கத்தக்க அணு ஆற்றலாக விளங்குகிறது. கார்பன் வரிசைப்படுத்துதல் மற்றும் கண்டறிவதற்கான தொழில்நுட்பத்தைக் கொண்டு கார்பன் நடுநிலை தன்மையை கொண்டு விளங்குகிறது. |

**9) a) 'கோபர்தன்' திட்டம் பற்றி சிறுகுறிப்பு வரைக.**
**b) இந்தியாவில் காற்றலை பயன்படுத்துவதில் உள்ள சவால்களை விளக்குக?**

**a) கோபர்தன் திட்டம் பற்றி சிறுகுறிப்பு வரைக.** 1

- உருவாக்கம் : உயிரி வேளாண் கரிம வளங்களை செயலாற்ற தூண்டல் திட்டமாகும்.
- தூய்மை இந்தியா திட்டத்தின் இரண்டாம் படிநிலையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- அமைச்சகம் : ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை பொறுப்பேற்கிறது.
- 2018ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- நோக்கம் : உயிரி கழிவுகளை அழுத்தப்பட்ட உயிரி வாயுவாக மாற்றி, விவசாயிகளின் வருவாயை பெருக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**திட்டத்தின் நன்மைகள்** 2

- ஒரு நாளைக்கு 3 மில்லியன் டன் சாணங்களை கொண்ட 300 மில்லியன் அளவிலான அதிக கால்நடை எண்ணிக்கையைக் கொண்ட இந்தியாவிற்கு மிகவும் உபயோகமானதாக இத்திட்டம் விளங்குகிறது.
- கால்நடை கழிவுகளை கழிவுகளாக பார்க்காமல் வருவாயாக மாற்றுவதற்கு விவசாயிகளை ஊக்கப்படுத்துகிறது.
- அரசு திட்டங்கள் மற்றும் வங்கிகளின் வாயிலாக தொழில்முனைவோருக்கு ஏற்றவகையில் சந்தை கடன் விகிதம் மற்றும் எண்ணெய் நிறுவனங்களுக்கு எரிபொருள் விநியோகம் ஆகியவற்றை நிலையாக பராமரிக்கிறது.

**b) இந்தியாவில் காற்றலை பயன்படுத்துவதில் உள்ள சவால்களை விளக்குக?**

**கொள்கை நடவடிக்கைகள்** 3

- ஆரம்பத்தில் காற்றாலை துறையில் முன்னேற்றம் காணப்படவில்லை. காரணம் காற்றாலை உற்பத்தி உள்ளிட்ட செயல்பாட்டிற்கான வரிவிதிப்புகளை அரசு கட்டுப்பாட்டில் வைத்துள்ளது மற்றும் சலுகைகளையும் தடை செய்கிறது.
- ஒவ்வொரு ஏலத்திலும் நிதி நிலையானது உச்சத்தை அடைந்தது
- மேலும் காற்று ஆற்றல் குறிப்பிட்ட பகுதியைப் பொறுத்து மாறுபடுவதால் ஒரு பொதுவான நிதி விகிதத்தை பராமரிப்பது கடினமானதாக உள்ளது.

**தொழில்நுட்ப சவால்கள்**

- குறைவான ஆற்றல் உற்பத்தி

- ஆற்றல் உற்பத்தியாளர்களின் தாமதமான நிதி அளிப்புகள்

**ஆராய்ச்சி**

- கடற்கரைப் பகுதிகளில் அதிகப்படியான தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.

**நிதியியல்**

- அதிக ஆரம்பகட்ட முதலீடு
- குறைவான தனியார் முதலீடு
- காற்று ஆற்றலின் காலநிலைக்கேற்ற பண்பு மாற்றம்

**10) இந்தியாவில் சூரிய ஆற்றல் அதிகமாக இருப்பினும், அதன் உற்பத்தியானது புதுப்பிக்கவியலா ஆற்றலைப் போல அதிகமாக இல்லை. ஏன்?**

**அறிமுகம்** 2

- பல்வேறு புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களின் மத்தியில் சூரிய ஆற்றலின் திறனானது நாட்டில் மிக அதிகமாகக் காணப்படுகிறது.
- இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் 250 முதல் 300 நாட்கள் கோடைக்காலமாக விளங்குகிறது.
- வெப்பமண்டல மற்றும் துணைவெப்பமண்டல பகுதிகளை ஒரு சதுர அடிக்கு 1600 முதல் 2200 கிலோவாட் அளவிலான கதிர்வீச்சு விளங்குகிறது.
- வருடத்திற்கு ஒரு மணிக்கு 6000 மில்லியன் ஜிகாவாட் அளவிலான ஆற்றலுக்கு இணையாக இது விளங்குகிறது.

**சூரிய ஆற்றலின் முழுமையான பயன்பாட்டை பயன்படுத்துவதில் உள்ள சவால்கள்** 3

- உள்நாட்டு உற்பத்தி அளவில் உள்ள பின்னடைவு
- போட்டோவோல்டேக் மின்கலன்களின் இறக்குமதி உலக வணிக நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்ட உள்நாட்டு தேவைகள்
- சூரிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நில அமைப்புகள்
- திறன் வாய்ந்த தொழிலாளர்கள் இல்லாமை
- சரியான நிதி சுழற்சி இல்லாமை
- குறைவான செலவில் உருவாக்கப்பட்ட சூரிய ஆற்றல் குறைவான வருவாயினை தருகிறது.
- கடந்த சில வருடங்களாக ஆற்றல் உற்பத்தித் தேவைகளை குறைத்து வருகிறது.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான உள்நாட்டு நடவடிக்கைகளின் பின்னடைவு
- பொதுமக்கள் பயன்படுத்தும் விதமாக இல்லாமல் மிக அதிகமாக ஆரம்பகால முதலீடு

**மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்** 3

- சர்வதேச சூரிய கூட்டிணைவு : இந்தியா மற்றும் பிரெஞ்சு நாடுகள் மேற்கொண்ட முன்னெடுப்பு
- சிறப்பு கட்டணம் உள்ளிட்ட கொள்கைகக்கு துணை செய்யும் நடவடிக்கைகள்
- சூரிய பூங்கா திட்டம்
- குசும் திட்டம்

**11) வெப்ப ஆற்றல் பாதுகாப்பைக் கொண்ட கரையோரப் பெருங்கடல் பகுதிக்கான உப்புநீர் சுத்திகரிப்பு நிலைய வடிவமைப்பினை விளக்குக.**

**இந்தியாவின் சுற்றுச்சூழல் பொருளாதாரத்தில் DOMஇன் தாக்கம்**

**கனிமங்கள்** 6

- கோபால்ட், துத்தநாகம் மற்றும் மாங்கனீசு போன்ற அரிய புவிக்கனிமங்களை இந்தியப் பெருங்கடல் கொண்டுள்ளது.
- திறன்பேசிகள், மடிக்கணினிகள் ஆகியவற்றை உருவாக்குவதற்காக மின்னணு தொழிற்சாலைக்கு இது பயன்படுத்தப்படுகிறது.

**ஆற்றல் மூலங்கள்**

- வாயு ஹைட்ரேட்டுகளின் பெட்ரோலியம் கொண்டுள்ளது.
- எண்ணெய் உற்பத்தியில் பயன்படுகிறது.

**மாங்கனீசு முகடு மற்றும் முடிச்சு**

- மாங்கனீசு, கோபால்ட்டின் நிக்கல், இரும்பு ஆகியவற்றின் செறிவு அடங்கியது.
- பல்வேறு பொருளாதார பயன்பாடுகளை உள்ளடக்கியது.

**நிலையான மேம்பாடு**

- நீலப் பொருளாதாரத்தின் வாயிலாக 5 ட்ரில்லியன் டாலர் அளவிலான பொருளாதார வளர்ச்சியை 2022க்குள் எட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது.

**காலநிலை மாற்றம்**

- ஆற்றல்களுக்கான தூய்மையான மூலங்கள்-கார்பன் வளையமாக செயல்படுகிறது.

**தேசிய பாதுகாப்பு**

- அரிய புவிக்கனிமங்களை கொண்டுள்ள முக்கியமான இராணுவத் தொழில்நுட்பங்களை தேசிய பாதுகாப்பை பராமரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- பெருங்கடல் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகிறது.

**பேரழிவுக்கான தயார்நிலை**

- ஆழ்கடல் ஆய்வுகள், நிலநடுக்கம் மற்றும் சுனாமியை முன்கூட்டியே கணிக்க உதவுகிறது.

**12) இந்தியாவின் ஆற்றல் பாதுகாப்பு மற்றும் அதன் சவால்கள் மற்றும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பற்றி எழுதுங்கள்.**

**தன்னிறைவு ஆற்றல்** 1

- நீண்டகாலத்திற்கான ஆற்றல் பாதுகாப்பு குறிப்பிட்ட கால இடைவெளி முதலீட்டினைக் கொண்டு ஆற்றல் உருவாக்க நடவடிக்கைளை மேற்கொண்டு பொருளாதார மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.
- தேவைக்கேற்ப மாற்றங்களை எதிர்கொண்டு துரித முறையில் அதனை சமன்செய்யும் ஆற்றல் அமைப்பினை குறுகிய கால ஆற்றல் பாதுகாப்பு உருவாக்குகிறது.

**ஆற்றல் பாதுகாப்பின் முக்கியத்துவம்** 1

- உட்கட்டமைப்பு நடவடிக்கைகளான அடிப்படைத் தேவைகள், மனித ஆற்றல் மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்தி உலக அளவில் எரிபொருள் பொருளாதார வளமிக்க நாடாக இந்தியா விளங்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.
- விரைவாக மாறிவரும் சர்வதேச எண்ணெய் விலைகளில் பொருளாதார ரீதியாக ஒரு அதிர்ஷ்டம் வாய்ந்த நாடாக விளங்குகிறது.

**இந்திய ஆற்றல் பாதுகாப்பில் உள்ள சவால்கள்**
- கொள்கை சவால்கள் **2**
- சவால்களை எதிர்கொள்வதில் உள்ள பின்னடைவுகள்
- குறைவான உட்கட்டமைப்பு சவால்கள்
- பொருளாதார சவால்கள்
- வெளியுறவுத்துறை சவால்கள்

**ஆற்றல் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்** **2**
- திறன் வளர்ப்பு
- கொள்கை மாற்றம்
- IESS 2047
- மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு
- மேம்படுத்தப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல்
- கட்டமைப்பு குறியீடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் 2030ஆம் ஆண்டுக்குள் 300 மில்லியன் யூனிட் அளவிலான மின்சார சேமிப்பினை நோக்கமாகக் கொண்டு ஆற்றல் பாதுகாப்பு திருத்தச் சட்டம் 2022இல் வெளியிடப்பட்டது.

**13) வரையறை மற்றும் அதன் கலவையை எழுதுக.**

**a) LPG**
**b) PNG**
**c) HCNG**

**Answer**

**a) LPG** **2**
- விரிவாக்கம் : திரவ பெட்ரோலிய வாயு
- உற்பத்தி : கச்சா எண்ணையை பிரித்தெடுத்தல் மூலம் உருவாக்கப்படுகிறது
- சேர்க்கைகள் : பியூட்டேன், புரொப்பிலீன், ஐசோ பியூட்டேனின் பியூட்டிலின்
- பயன்பாடு : வீடுகளில் சமையலுக்கு பயன்படுத்தப்படுகிறது.
- வாகன எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

**b) PNG** **2**
- விரிவாக்கம் : குழாய் இயற்கை வாயு
- சேர்க்கைகள் : $CH_4$ , ஹைட்ரஜன் அணுவில் உள்ள ஒரு மூலக்கூறில் ஒரு கார்பன்
- பயன்பாடு : வெப்பப்படுத்தும் உபகரணங்களுக்கான எரிபொருள்
- சமையல் எரிவாயு

**c) HCNG** **2**
- விரிவாக்கம் : ஹைட்ரஜன் நிறைந்த அழுத்தப்பட்ட இயற்கை வாயு
- சேர்க்கைகள் : ஹைட்ரஜன் மற்றும் அழுத்தப்பட்ட இயற்கை வாயுவின் கலப்பு
- பயன்பாடுகள் : பேருந்துகளில் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது
- டெல்லியின் முதல் நகரமாக 2020ஆம் ஆண்டு இதனை நடைமுறைப்படுத்தியது.
- இது காற்று மாசுபாட்டைக் குறைக்கும் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டது.

**14) ‘இயற்கை வாயுவின் மரபுசாரா வடிவங்களை’ பற்றி எழுதுக.**

**நிலக்கரி படுகை மீத்தேன்** **1.5**
- நிலக்கரி படுகை மீத்தேன் என்பது உயிரி எரிபொருளை உட்செலுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலக்கரிப்பகுதிகள் ஆகும்.
- இது இயற்கை வாயுவின் ஒற்றை பரிமாற்றப்பட்ட முறையாகும்.
- ஹைட்ரஜன் சல்பைடின் குறைபாட்டால் இது இனிப்பு வாயு என்று அழைக்கப்படுகிறது.
- திட வாயிலான நிலக்கரியில் மீத்தேன் ஆனது உறிஞ்சப்படுகிறது.
- நிலக்கரிமயமாக்கல் செயல்பாட்டில் தாவரங்களை நிலக்கரியாக மாற்றும் செயல்பாட்டில் இது உருவாகிறது.
- நிலக்கரி சுரங்கங்களின் அடிப்பகுதியில் இது காணப்படுகிறது.
- அதிக பாதுகாப்பான இடங்களில் உள்ளது.

**களிப்பாறை வளிமம்** **1.5**
- ஊடுருவக்கூடிய தன்மை வாய்ந்த பாறைகளிலிருந்து இவ்வாயு பிரித்தெடுக்கப்படுகிறது.
- இது மாற்றத்தக்க ஹைட்ரோகார்பன்களாக விளங்குகிறது.

**நிலக்கரிப் படுகைகளின் தொகுப்பு** **1.5**
- நைட்ரஜன், கார்பன் டை ஆக்சைடு மற்றும் ஈத்தேன் போன்ற ஹைட்ரோகார்பன்கள் ஆகியவற்றால் மீத்தேன் உருவாக்கப்படுகிறது.

**பிரித்தெடுக்கும் செயல்முறை** **1.5**
- பிளவுகளை ஏற்படுத்துவதன் மூலம் பிரித்தெடுக்கும செயல்பாடு நிகழ்கிறது.
- எண்ணெய் மற்றும் வாயுக்கள் களிப்பாறை வளிமமாக பாறைகளை பிளவுபடுத்துதல் மூலம் பெறப்படுகிறது.
- காம்பே, கிருஷ்ணா, கோதாவரி, காவேரி, தாமோதர் பள்ளத்தாக்கு, அசாம் – அரகான் படுகை, இராஜஸ்தான் மற்றும் விந்தியா படுகை ஆகியவற்றின் வளமீட்புப் பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன.

**15) மரபணுக்கள் மற்றும் குரோமோசோம்களின் செயல்பாடுகளுக்கிடையே ஒப்பீடு தருக.**

**அறிமுகம்** **1.5**
- 20ஆம் நூற்றாண்டில் கூறப்பட்ட உயிர் அணுவியலாளரின் கூற்றுப்படி அனைத்து செல்களிலும் குரோமோசோம் மற்றும் அதன் எண்ணிக்கை நிலையானதாக விளங்கும்.
- யூகேரியாட்டிக் செல்கள் இரண்டு ஹேப்ளாய்டு இணை குரோமோசோம்களை கொண்டுள்ளது.
- அவற்றில் ஒரு இணை பெற்றோராக செயல்படுகிறது.
- குரோமோசோமில் உள்ள சோமேட்டிக் செல்கள் அதன் பண்புகள் மற்றும் செயல்பாடுகளுக்கு பொறுப்பேற்கிறது.

**ஒப்பீடு** **4.5**

| | |
|---|---|
| அல்லீல்கள் இணையான காரணிகளாக செயல்படுகிறது. | குரோமோசோம்கள் இணையாக பங்கெடுக்கின்றன. |
| கரு உருவாவதலின் போது அல்லீல்கள் பிரிக்கப்படுகின்றன. | மீசோசிஸ் செயல்பாட்டின் போது குரோமோசோம்கள் பிரிக்கப்படுகின்றன. |
| மெண்டலின் காரணிகள் சுதந்திரமாக வகைப்படுத்தப்படுகின்றன | மீசோசிஸ் செயல்பாட்டில் பிரிக்கப்பட்ட குரோமோசோம் அதிலுள்ள பிணைக்கப்பட்ட மரபணுக்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. |

**16) மெண்டலின் விதிகளை விவரி**

**மெண்டலிய பாரம்பரியத்தில் மெண்டலிய விதிகள்**

- மெண்டலின் ஒரு பண்புக் கலப்பினைக் கூர்ந்து ஆராய்ந்ததின் விளைவாக இரு முக்கிய விதிகள் உருவாக்கப்பட்டன. **1**
- ஓங்குத்தன்மை விதி
- தனித்துப் பிரிதல் விதி
- இந்த அறிவியல் விதிகள் பரிணாமச் சரித்திரத்தில் முக்கியப் பங்காற்றுகிறது.

**ஓங்குத் தன்மை விதி** **4.5**

- பண்புகள், காரணிகள் என்றழைக்கப்படும் தனித்தியங்கும் அலகுகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. எதிரிடைப் பண்புகளுக்கான இணைக் காரணிகளில் ஒன்று ஓங்குத்தன்மையுடனும் மற்றொன்று ஒடுங்கு தன்மையுடனும் காணப்படும்.
- இவ்விதி, ஒரு பண்புக் கலப்பினை விளக்குகிறது. (அ) முதல் மகவுச்சந்ததியில் ($F_1$) ஒரே ஒரு பெற்றோர் பண்பு வெளிப்படுகிறது (ஆ) இரண்டாம் மகவுச்சந்ததியில் ($F_2$) இரு பெற்றோர் பண்புகளும் வெளிப்படுகின்றன. இரண்டாம் மகவுச்சந்ததியில் ($F_2$) பண்புகள் 3:1 விகிதாச்சாரத்தில் உருவாகின்றன.

**தனித்துப்பிரிதல் விதி (கேமீட்டுகளின் தூயத்தன்மை விதி)** **2.5**

- ஒரு கலப்புயிரியில் வேறுபட்ட இரண்டு காரணிகள் இணைந்து காணப்பட்டால் ஒன்றுடன் ஒன்று கலப்படையாமல் கேமீட்டுகள் உருவாக்கத்தின் போது தனித்துப் பிரிந்து கேமிட்டுக்குள் செல்கிறது. இது தனித்துப் பிரிதல் விதி அல்லது கேமீட்டுகளின் கலப்பற்ற தன்மை விதி எனப்படும்.
- முதல் மகவுச்சந்ததியில் இரு பண்புகளில் ஒன்று மட்டுமே காணப்பட்ட போதிலும், இரண்டாம் மகவுச்சந்ததியில் இரு பண்புகளும் வெளிப்படுகின்றன. எனவே ஒரு மரபணுவில் காணப்படும் இரண்டு அல்லீல்களும் ஒன்றோடொன்று கலப்பதில்லை.
- கேமீட் உருவாக்கத்தின் போது இந்த இணை அல்லீல்கள் ஒவ்வொரு கேமீட்டிலும் ஒன்று என்ற விதத்தில் தனித்துப் பிரிகின்றன. எனவே தூயகால்வழித் தாவரம் ஒரே மாதிரியான கேமீட்களை உருவாக்குகிறது. ஆனால் ஒரு கலப்புயிரித் தாவரம் இரண்டு விதமான கேமீட்களை உருவாக்குகின்றன.
- இது ஒவ்வொரு கேமீட்டிலும் ஒரு அல்லீலை பெற்றுச் சமமான விகிதாச்சாரத்தில் உருவாகின்றன. எனவே, கேமீட்கள் எப்பொழுதும் கலப்புயிர்களாக இருப்பதில்லை.

**17) ஸ்டெம் செல் வரையறுக்கவும். மருத்துவத் துறையில் அதன் பயன்பாடு பற்றி விளக்கவும்.**

**ஸ்டெம் செல்** **1**

- ஸ்டெம் செல்கள் என்பது வேறுபடுத்த முடியாத உயிரி செல்களாகும்.
- ஆனால் சிறப்பு செல்களாக வேறுபடுத்த முடியும்.
- அதிக ஸ்டெம் செல்களை உருவாக்குவதற்காக இவை பிரிக்கப்படுகிறது.

**தன்மைகள்** **1**

- நீடித்த காலங்களுக்காக தன்னைத்தானே புதுப்பித்தல் மற்றும் பிரியும் தன்மை கொண்டது.
- சிறப்புவாய்ந்த செல் வகைகளை மேம்படுத்த உதவுகிறது

**வகைகள்** **1**

- கரு ஸ்டெம் செல்கள்
- வளரிளம் ஸ்டெம் செல்கள்

**பயன்பாடுகள்** **3**

**கரு ஸ்டெம் செல்கள்**

- ஆரம்பகால மேம்பாடுகளில் பங்கு கொள்கிறது.
- கருவுக்கான புதிய செல்களை அளித்து, குழந்தை வளர்ச்சிக்கு உதவுகிறது.

**வளரிளம் ஸ்டெம் செல்கள்**

- சிதைவடைந்த செல்களின் இடமாற்றத்திற்கு புதிய செல்களை விநியோகம் செய்கின்றன.
- செல்களாக முழுமையான அளவில் மாறக்கூடிய பல்வேறு ஆற்றலை கொண்டுள்ளது.
- எடுத்துக்காட்டு: இரத்த செல்கள், தோல் செல்கள்

**ஸ்டெம் செல்கள் மாற்றம்**

- சிகிச்சைகளின் போது அல்லது ஹீமோதெரபி சிகிச்சையினால் பாதிக்கப்பட்ட செல்களுக்கான மாற்றாக ஸ்டேம் செல்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- உறுப்பு தானம் அளித்தவர் லியூக்கேமியா, நிணநீர் பிரச்சினைகள் மற்றும் நரம்பியல் குறைபாடுகள் கொண்டவராக இருக்கும்பட்சத்தில் செல்கள் சரியாக செயல்படாத நிலையில் இவை பயன்படுத்தப்படுகின்றன.
- இந்த பரிமாற்றத்திற்கு வளரிளம் ஸ்டெம் செல்கள் உபயோகமாக உள்ளது.

**18) மரபணு மாற்றப்பட்ட பயிர்களை வரையறுக்கவும். இந்தியாவில் அதன் சட்டநிலை என்ன? அதன் நன்மைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பின் பார்வையின் அவை எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதைக் கொடுக்கவும்.**

**மரபணு மாற்றப்பட்ட பயிர்கள்** **1**

- மரபியல் பொருட்களை மற்ற உயிரிகளில் உட்செலுத்துவதன் மூலம் செயற்கை முறையில் மாற்றியமைக்கப்பட்ட மரபணுக்களை கொண்டவை மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் என்று அழைக்கப்படுகிறது.

**பண்புகள்** **1**

- விளைச்சலை அதிகரிக்கிறது.
- களைக்கொல்லிகளை தாங்குகிறது.
- நோய் எதிர்ப்பு சக்தி
- ஊட்டச்சத்தை மதிப்பை மேம்படுத்துகிறது.
- எடுத்துக்காட்டு : Bt பருத்தி, Bt கத்திரிக்காய்

**இந்தியாவின் சட்டரீதியான நிலை** **1**

- வணிக முறையில் மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் உருவாக்குவதை ஒரு உச்சபட்ச குழுவாக மரபணு பொறியியல் குழு அனுமதிக்கிறது.
- வணிக முறையில் 2002ஆம் ஆண்டு Bt பருத்திக்கு அனுமதி அளிக்கப்பட்டது.
- அனுமதி அளிக்கப்படாத மரபணு மாற்றப்பட்ட பயிர்களை உற்பத்தி செய்வது சுற்றுச்சூழல் பாதுகாப்புச்

SURESH

சட்டம்1986இன் கீழ் 5 வருட சிறை தண்டனை மற்றும் 1 இலட்சம் அபராதம் விதிக்கப்படும்.

**உணவுப் பாதுகாப்பு முக்கியத்துவத்தின் நன்மைகள்**

- மனித சுகாதாரத்திற்கான ஊட்டச்சத்து **3**
- அதிக புரதம் உள்ள மரபணு மாற்றப்பட்ட உணவு வகைகளில் இருந்து ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குகிறது.
- எடுத்துக்காட்டு : தங்க அரிசி – வைட்டமின் ஏ குறைபாடு
- குறைவான அளவு மைக்கோடாக்சின்களை கொண்டுள்ளது – Bt சோளம்
- இந்தியா 2002ஆம் ஆண்டு Bt பருத்தியை அறிமுகம் செய்தது.
- நச்சுத்தன்மை வாய்ந்த உயிர்க்கொல்லிகள் பயன்பாட்டை இது பெரிதும் குறைத்தது.
- பேசில்லஸ் துரிஞ்ஜியன்சிஸ் என்ற பாக்டீரியம் வகையினை இது உருவாக்கியது.
- பல்வேறு பூச்சிகளுக்கு நச்சுத்தன்மை வாய்ந்த ஒரு இயற்கையில் உருவாக்கப்பட்ட பாக்டீரியாவாக இது விளங்கியது.
- இது பயிர்களை பாதுகாக்கிறது. ஆனால் மனித சுகாதாரத்திற்கு எவ்வித தீங்கையும் விளைவிப்பதில்லை.

**சுற்றுச்சூழல்**

- நிலையான வேளாண்மை – குறைவான வேதி உரம், களைக்கொல்லி, பூச்சிக்கொல்லி பயன்பாடு
- காலநிலை மாற்றத்தை ஏற்றுக்கொள்ளுதல்

## அலகு - 2

**1) இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கொள்கைகளின் முக்கிய அம்சம் மற்றும் தாக்கம் பற்றி விவாதிக்கவும்.**

**அறிமுகம்** **1**

- சுதந்திரத்திற்குப் பிறகு மக்கள் நலனை காப்பதில் உள்ள அறிவியலின் பங்கினை இந்தியா உணர்ந்தது.
- தற்போது வரை வெளியிடப்பட்டுள்ள கொள்கைகள் பற்றி விவாதிப்போம். **2**




**அறிவியல் கொள்கை தீர்மானம் (1958)** **2**

**ஊக்கம்**

- வளர்ந்துவரும் அறிவியல் நிறுவனங்கள் / அறிவியல் மனப்பான்மை
- தேசிய கட்டுமானம் மற்றும் சமூகப் பொருளாதார மாற்றத்திற்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஒரு கருவியாக விளங்குகிறது.

**முக்கிய அம்சங்கள்**

- அறிவியல் நிறுவனங்களின் உருவாக்கம், அறிவியல் ஆராய்ச்சி மற்றும் திறன் வளர்ப்பு
- அறிவியல் செயல்பாடுகள், கண்டுபிடிப்புகள் மற்றும் புதிய அறிவியல் சார்ந்த கல்வியறிவினை பரப்புதல்

**தாக்கங்கள்**

- ஒவ்வொரு அறிவியல் நிறுவனங்கள் மற்றும் தேசிய ஆய்வுக்கூடங்கள் உருவாக்கம்
- ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் உயர் கல்வியின் வலுவான அடித்தளமாக விளங்குகிறது.

**தொழில்நுட்பக் கொள்கை தீர்மானம் 1983** **2**

**ஊக்கம்**

- சமூக எதிர்பார்ப்புகள் ஆகியவற்றிற்கு வலுவூட்டி மக்கள் வாழ்வியலின் மீது தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்துகிறது.
- தொழில்நுட்ப மேம்பாடு மக்களின் இலட்சியங்களில் கவனம் செலுத்துகிறது.

**முக்கிய அம்சங்கள்**

- வட்டார வளங்களின் பயன்பாட்டை அதிகரித்தல்
- தகவல், மின்னணு மற்றும் உயிரி தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வலுவான தொழில்நுட்ப நம்பகத்தன்மையை உருவாக்குவதலாகும்.

**தாக்கங்கள்**

- தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியை உருவாக்குதல்
- தொழில்நுட்பம், தகவல் பரப்புதல் மற்றும் மதிப்பீட்டு சபை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கை 2003**

**ஊக்கம்** **2**

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் பிரிக்க முடியாத பிணைப்பினை உடையது.
- சமூக, பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டில் இணையத்தை ஜனநாயகப்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கங்கள் ஆகியவை தவிர்க்க முடியாததாக விளங்குகிறது.

**முக்கிய அம்சங்கள்**

- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் மீதான அதிக முதலீட்டினை ஈர்க்கிறது.
- முதலீட்டினை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2% வரை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- கல்வி நிறுவனங்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளை நவீனப்படுத்துதல்

- இந்தியா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சூழலுக்கு பங்களிக்கும் அறிவியலாளர்கள் மற்றும் பொறியியலாளர்களை ஊக்குவிக்கும் முயற்சியாகும்.

**முக்கிய தாக்கங்கள்**
- 10 ஆண்டுகள் முடிவில் 0.7% உள்நாட்டு உற்பத்தி அளவில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க அளவில் முதலீடு மேம்பாடு அடைந்துள்ளது.
- இந்தியாவின் வெளியீட்டு உற்பத்தி அதிகரித்துள்ளது.
- மனிதவளம் மற்றும் நிறுவனங்களின் வளர்ச்சி நிலையாக அதிகரித்துள்ளது.

**அறிவியல், தொழில்நுட்ப மற்றும் புதுமைக்கொள்கை 2013** 2

**ஊக்கம்**
- 2010 - 2020ஆம் ஆண்டுக்கான புதுமையாக அறிவிக்கப்பட்டது.
- அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமையாக கண்டுபிடிப்புகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பொருளாதார அடிப்படையிலான அறிவை மேம்படுத்துதலாகும்.
- 5 முதன்மையான உலக அறிவியல் சக்திகளில் இந்தியாவை நிலைநிறுத்துவதினை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

**முக்கிய அம்சங்கள்**
- புதுமையாக சூழலை கட்டமைக்கும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செயல்பாடுகளுக்கு சாவியாக புதுமையான கண்டுபிடிப்புகளே விளங்குகிறது.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் தனியார் துறையை ஈர்த்தல்
- சமூக, பொருளாதார முதன்மை அம்சங்களின் அறிவியல் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொடர்புத் துறைகளை இணைத்தல்

**தாக்கங்கள்** 1
- தேசிய புதுமையான சுற்றுச்சூழலை கட்டமைப்பதற்கான திசையை நோக்கி மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்பாகும்.
- உலக மகா அறிவியல் முன்னெடுப்பின் இந்தியாவின் தலைமைத்துவம் மற்றும் பங்கெடுப்பு.

**2) CAIR-னை விளக்குக மற்றும் அறிவியல் & தொழில்நுட்பத்தில் அதன் முக்கியத்துவத்தை தருக**

**செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரவியலுக்கான மையம்**

**உருவாக்கம்** 1
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரவியல் பாதுகாப்பு சேவைகளை நடைமுறைப்படுத்த அக்டோபர் 1986ஆம் ஆண்டு ஒரு முகமையின் கீழ் செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரவியல் மையம் உருவாக்கப்பட்டது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் இம்மையம் செயல்படுகிறது.

**பங்களிப்புகள்** 1
- தானியங்கி மற்றும் எந்திரவியல், மனித மற்றும் எந்திர இணைப்பு வடிவமைப்பு, திறன் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு இம்மையம் பங்களிப்பினை வழங்குகிறது.
- அன்றாட பிரச்சினைகளில் பயன்படுத்தும் விதமாக செயற்கை நுண்ணறிவு செயல்பாட்டினைக் கொண்டு பயனாளருக்கு இணக்கமான அமைப்பினை மேம்படுத்துகிறது.

**செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரவியல் மையம்** 2
- செயற்கை நுண்ணறிவு, எந்திரவியல் மற்றும் பாதுகாப்பு பயன்பாடுகளின் கவனம் செலுத்தக்கூடிய தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல்
- பாதுகாப்பு அமைப்புகளுக்கான தேவையான நவீன மென்பொருள் தொழில்நுட்பத்தினை உருவாக்குதல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல்
- செயற்கை நுண்ணறிவு, எந்திரவியல் ஆகிய துறைகளை எதிர்கொள்ளும் நெருக்கடிகளை களைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**அமைப்பின் தொகுப்பு**
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, வடிவமைப்பு, உற்பத்தி துணை, தர நிர்ணயம் மற்றும் ஆலோசனை சேவைகள் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்ளும் பொறியியலாளர்கள் மற்றும் அறிவியலாளர்கள் பல்வேறு தளங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**முதன்மை உந்துசக்திப் பகுதிகள்** 2
1. திறன் அமைப்புகள்
2. எந்திர கற்றல்
3. எந்திரவியல்
4. மென்பொருள் பொறியியல்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், இந்திய தொழில்நுட்ப நிறுவனம், இந்திய பல்கலைக்கழகத்தின் தேசிய சட்டப்பள்ளி, மத்திய ஆராய்ச்சி நிறுவனம், இந்திய அறிவியல் நிறுவனம், தேசிய விண்வெளி ஆய்வுக்கூட. இந்திய மின்னணுக்கழகம் ஆகிய நிறுவனங்களின் வலுவான கூட்டமைப்பினால் இம்மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

**இம்மையத்தின் முக்கிய அம்சங்கள்** 4
- செயற்கை நுண்ணறிவு, எந்திரவியல் மற்றும் திறன் அமைப்புகள் ஆகியவற்றில் உள்ள பாதுகாப்பு பயன்பாடுகளை மேம்படுத்துவதை முதன்மை இலக்காகக் கொண்டுள்ளது.
- பல ஆண்டுகள் கடந்த பல்வேறு துறையைச் சார்ந்த நிபுணர்களை இம்மையம் உள்ளடக்கியது.

1. அறிவுசார் அமைப்பு
2. உயர்ந்த நம்பகமான அமைப்பு
3. அபாயகரமான மற்றும் விண்வெளி பயன்பாட்டுக்கான எந்திரவியல்
4. தொழிற்சாலை தானியங்கிக்கான கற்றல் வியூகம்
5. எந்திர பார்வை மற்றும் பட செயல்பாடு
6. மொழி அறிவு மற்றும் செயல்படுத்தும் திறன்

- ஏவுகணைகள், ரேடார்கள் மற்றும் டாங்கிகள் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு உபகரணங்களை தொழில்நட்பத்தை பயன்படுத்தி கண்டறிந்துள்ளது.
- எதிர்கால பாதுகாப்பு நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரவியல் துறை ஆகியவற்றிற்கு முதன்மை அளிக்கப்படுகிறது.

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் இம்மையத்தின் செயல்பாட்டை மேற்பார்வை செய்கிறது.
- தற்காலிக தேவைகளுக்கு ஏற்ப இம்மையத்தின் செயல்பாடுகள் மாறுதலுக்கு உட்படுத்தப்படுகிறது
- பயன்பாட்டு அடிப்படையிலான திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு பயன்பாடுகளுக்கு ஏற்ற ஆராய்ச்சிகள் ஆகியவற்றில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

3) **வேளாண் ஆராய்ச்சிக்கான இந்திய சபை பற்றி குறிப்பு வரைக.**

**வேளாண் ஆராய்ச்சிக்கான இந்திய சபை** 2

- வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான சபை, வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகம் உள்ளிட்ட துறைகளால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தன்னார்வ அமைப்பு இதுவாகும்.
- ஜூலை 16, 1929ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- வேளாண் ஆராய்ச்சிக்கான முதன்மையான சபையாக இது அங்கீகரிக்கப்பட்டது.
- நாடு முழுவதும் 101 நிறுவனங்கள் மற்றும் 71 வேளாண் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றைக் கொண்டு புதுதில்லியை தலைமையிடமாகக் கொண்டு இயங்குகிறது.

**செயல்பாடுகள்** 2

- தேனீ வளர்ப்பு, மீன் வளர்ப்பு மற்றும் விலங்கின அறிவியல் உள்ளிட்டவற்றின் ஆராய்ச்சி மற்றும் வழிகாட்டுதல்களை மேற்கொள்ளும் ஒரு உச்ச அமைப்பாக இச்சபை விளங்குகிறது.
- முன்னாள் மத்திய வேளாண் அமைச்சரே இவ்வமைப்பின் முன்னாள் தலைவராக விளங்கினார்.
- ஸ்ரீ நரேந்திர சிங் தோமர் தற்போதைய தலைவராக விளங்குகிறார்.
- நாட்டின் நிலையான வேளாண் வளர்ச்சி மற்றும் புதுமைக்கான கட்டமைப்பினைக் கொண்டு ICAR தொலைநோக்கு 2050 திட்டமிடப்பட்டுள்ளது.

**வேளாண் துறையின் இச்சபையின் பங்களிப்புகள்** 2

- **பசுமைப்புரட்சி** : பசுமைப்புரட்சியை நடைமுறைப்படுத்துவதில் ஒரு முதன்மை பங்கினை இம்மையம் கொண்டுள்ளது. வேளாண் துறையில் உயர்கல்வியை ஊக்குவிப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது.
- **பயிர் உற்பத்தியை அதிகரித்தல் :** ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டினை மேற்கொண்டு உணவு தானிய உற்பத்தியின் அளவை 5.6 மடங்கும் மீன் வளத்தை 16.8 மடங்கும் பால்வளத்தை 10.4 மடங்கும் முட்டை வளத்தை 52.9 மடங்கும் மற்றும் தோட்டக்கலையை 10.5 மடங்கும் மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- **பறவைக்காய்ச்சலுக்கான தடுப்பூசி** : ஜூலை 2006ஆம் ஆண்டு இத்தடுப்பூசி உருவாக்கப்பட்டது. போபாலில் உள்ள கால்நடை நோய் ஆய்வுக்கூடத்தின் இது உருவாக்கப்பட்டது. இக்கூடத்தில் H5N1 வைரஸ் பறவைக்காய்ச்சல் மாதிரி பரிசோதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பறவைக் காய்ச்சல் பிப்ரவரி மாதம் உறுதி செய்யப்பட்டது. மேலும் இதற்காக 8 கோடி வரை ஒதுக்கப்பட்டது.

**வேளாண் ஆராய்ச்சிக்கான இந்திய சபையின் முக்கியத்துவம்** 2

- நிலையான வேளாண் செயல்பாடுகளுக்கான திட்டம், நடைமுறைப்படுத்துதல், ஒருங்கிணைத்தல், ஊக்குவித்தல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டினை மேற்கொள்ளுதல்
- தரமான மனிதவள மேம்பாட்டினை மேற்கொள்ளும் விதமாக உதவி, தாக்கம் மற்றும் வேளாண் கல்வியை ஒருங்கிணைத்தல்
- வேளாண் அடிப்படையிலான ஊரக மேம்பாடு, திறன் வளர்ப்பு செயல்பாடு, தொழில்நுட்ப செயல்பாடு ஆகியவற்றை மேம்படுத்துதல்
- கொள்கை, ஒருங்கிணைப்பு மற்றும் வேளாண் ஆராய்ச்சிக்கான கல்வி மற்றும் நிலைப்புத்தன்மை

**இச்சபையின் முன்னெடுப்புகள்** 4

- **விவசாய புதுமை நிதி :** திறன்வாய்ந்த விவசாய புதுமையான திட்டங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை அறிவியல் அடிப்படையில் மதிப்பாய்வு செய்து ஊக்குவிக்கிறது.
- புதுமைகளுக்கான இம்மையம் புதுதில்லியில் நிறுவப்பட்டு ஆராய்ச்சி செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது.
- விவசாயிகளின் விவசாயத்தில் பின்பற்றப்படும் அறிவியல்பூர்வமான நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து புதுமைகளுக்கு வழிவகுக்கிறது.
- **நானோ உரங்கள் மற்றும் நானோ பூச்சிக்கொல்லிகள்** : உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டை குறைக்கும்விதமான இயற்கை வேளாண்மையை நானோ உரங்கள் மூலமாக ஊக்குவிக்கிறது.
- **வேளாண் துறையில் தொழில்நுட்பம்** : வேளாண்மையை மேம்படுத்துவதற்கான பயன்பாட்டு முறைகள் மற்றும் அறிவியல் செயல்பாடுகளை இச்சபை முன்மொழிகிறது.
- **வலைபின்னல் உருவாக்கம்** : 105 நிறுவனங்களுக்கு இடையிலான பிணைப்பை மேம்படுத்தி தொழில்நுட்பத்தை பயன்படுத்த விவசாயிகளை ஊக்குவிக்கிறது.
- **விவசாயிகள் அறிவியல் காங்கிரஸ்** : விவசாயிகளின் அறிவியல் மதிப்பீடு மற்றும் புதுமைகளை முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் விதமாக 107 ஆண்டுகளில் இல்லாத அளவில் 2020ஆம் ஆண்டு முதல்முறையாக நிறுவப்பட்டது.
- இதன் கருத்தாக்கம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் : ஊரக மேம்பாடு
- **இயற்கை வேளாண்மை :** பல்வேறு காலநிலைகளுக்கு ஏற்ற 45 வித்தியாசமான இயற்கை வேளாண்மை மாதிரிகளை மேம்படுத்தி 51 ஒருங்கிணைந்த வேளாண் அமைப்புகளின் வருவாயை அதிகரிக்கும் விதமாக செயல்படுகிறது.

SURESH

- **வேளாண்மையில் இளம் தலைமுறையினரை ஈர்த்து தக்கவைத்துக் கொள்ளுதல் :** வேளாண் துறையில் இளம் தலைமுறையினரை ஈர்த்து ஊரக உயிரி பொருளாதாரத்தை மேம்படுத்தும் விதமாக ஆர்யா என்று அழைக்கப்படும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**4) விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் இந்தியாவின் சாதனைகளை பற்றி விவாதிக்கவும். தொழில்நுட்பத்தின் பயன்பாடு இந்தியாவின் சமூக-பொருளாதார வளர்ச்சியில் எவ்வாறு உதவுகிறது?**

**அறிமுகம்** 0.5

- அறிவியல் மற்றும் மேம்பாட்டு செயல்பாட்டின் உலக அளவில் ஒரு குறிப்பிட்ட அம்சத்தினை இந்தியா கொண்டுள்ளது.
- இந்திய விண்வெளி நிகழ்வுகளை 1972ஆம் ஆண்டு தொடங்கி செயல்படுத்தியது.
- இஸ்ரோ : 1972-நோக்கம் : தேசிய மேம்பாட்டிற்கான சேண விண்வெளி தொழில்நுட்பம்

**விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் இந்தியாவின் சாதனைகள்**

**செவ்வாய் சுற்றுப்பாதை திட்டம்** 1

- குறைவான செலவில் (460 கோடி மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியாவின் முதல் கிரகங்களுக்கு இடையிலான திட்டம் இதுவாகும்.
- இராஸ்காஸ்மாஸ், நாசா மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகமை ஆகியற்றிற்குப்பின் செவ்வாயை அடைந்த 4ஆவது ஆண்டு இந்தியா ஆகும்.
- முதல் முயற்சியிலேயே செவ்வாய் கிரக திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்திய நாடு இந்தியா ஆகும்.
- நவம்பர் 5, 2013ஆம் ஆண்டு மங்கள்யான் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.
- இது செப்டம்பர் 24, 2014ஆம் ஆண்டு விண்கலம் செவ்வாய் கிரகத்தை அடைந்தது.

**104 செயற்கைக்கோள்களை ஏவுதல்** 1

- பிஎஸ்எல்வி சி – 37 : மென் ஆற்றலுக்கான பொருளாதார விண்வெளித் திட்டம்
- ஒரே முறையில் 104 செயற்கைக்கோள்களை ஏவி வரலாற்றுச் சாதனை புரிந்தது.
- இது அறிவியல் மற்றும் விண்வெளித்துறையின் அசைக்க முடியாத சாதனையாக விளங்குகிறது.

**சந்திராயன் ஏவுதல்** 1

- ஜிஎஸ்எல்வியால் ஏவப்பட்டது.
- நிலவின் தென்துருவத்தில் ஆராய்ச்சியினை மேற்கொண்டது.
- இந்தியாவின் முதல் நிலவுத் திட்டமாகும்.
- இஸ்ரோவால் 2008ஆம் ஆண்டு ஏவப்பட்ட முதல் ஆளில்லா நிலவுப் பயணத்திட்டமாகும்.
- இந்த விண்கலம் சுற்றுப்பாதை மற்றும் தாக்கத்தினை கொண்டுள்ளது.

**ஜிஎஸ்எல்வி** 1

- இஸ்ரோவின் இன்னொரு திறன்வாய்ந்த திட்டம் இந்த புவி ஒத்திசைவு செயற்கைக்கோள் ஏவும் திட்டமாகும்.
- புவி ஒத்திசைவு சுற்றுவட்டப்பாதைகளில் இவ்வாகனத்தை பயன்படுத்தி விண்வெளிப் பொருட்களும் ஏவப்படுகிறது.
- முழுவதுமாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட க்ரையோஜெனிக் எஞ்ஜினைக் கொண்ட ஜிஎஸ்எல்வி டி–5 ஆனது ஜனவரி 5, 2015ஆம் ஆண்டு ஏவப்பட்டது.

**மறுபயன்பாட்டு ஏவு வாகனம்** 1

- விண்வெளியில் உள்ள தேவையற்ற பொருட்கள் மற்றும் நெரிசலை தடுக்கும் விதமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- 23 மே 2016,ஆம் ஆண்டு இந்தியா தனது முதல் மறுபயன்பாட்டு ஏவு வாகனத்தை பரிசோதனை செய்தது.
- இதன் சுய கட்டுப்பாடு, வழிகாட்டுதல் உள்ளிட்ட செயல்பாடுகளை ஆராய்ந்தது.
- இதன் மூலம் குறைவான செலவை விண்வெளியுடனான அதிக தொடர்பை மேற்கொள்ள முடியும்.

**IRNSS**

- இராணுவத்தில் பயன்படுத்தப்படும் புவியிடங்காட்டிக்கு மாற்றாக அமைகிறது.

**இந்தியாவின் முதல் க்ரையோஜெனிக் என்ஜின்** 0.5

- ஜிஎஸ்எல்வி – டி – 5 மூலமாக முழுவதும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட க்ரையோஜெனிக் என்ஜின் பரிசோதிக்கப்பட்டது.
- புவி ஒத்திசைவு ஏவு வாகனம் இரண்டு டன் வரையிலான எடை கொண்ட செயற்கைக்கோள்களை சுமந்து செல்லும் தன்மை கொண்டது.
- இது சுற்றுக்கலம் (Orbiter), தரையிறங்கி மற்றும் உலவி (Rover) ஆகிய மூன்றையும் ஒருங்கே கொண்டது. இத்திட்டமானது பெரும்பாலான நேரங்களில் நிழல்படிந்து காணப்படும், நிலவின் தென்பகுதியை ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டது.

**சுற்றுக்கலம்**

- இது நிலவினை சுற்றி வரக் கூடியது. மேலும், கர்நாடக மாநிலத்தில் பைலாலு என்னுமிடத்தில் உள்ள கட்டுப்பாட்டு தரையிறங்கியுடனும் தகவல் பரிமாற்றம் செய்யும் திறன் படைத்தது.

**தரையிறங்கி**

- இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை Dr.விக்ரம் சாராபாய் அவர்களின் நினைவாக இதற்கு விக்ரம் என பெயரிடப்பட்டுள்ளது.

**உலவி**

- இது பிரக்யான் (பிரக்யான் என்பது சமஸ்கிருதச் சொல், இதன் பொருள் அறிவு) என்னும் பெயர் கொண்ட, ஆறு சக்கரங்களை உடைய ரோபோவாகனம் (Robotic-Vehicle) ஆகும். சந்திரயான் - 2 ஆனது 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20-ஆம் நாள் நிலவின் வட்டப் பாதைக்குள் நுழைந்தது.
- திட்டத்தின் இறுதி நிலையில், 2019ஆம் ஆண்டு செப்டம்பர் 7 ஆம் நாள்,நிலவின் மேற்பரப்பிலிருந்து சுமார் 2.1 கி.மீ தொலைவிலிருந்த போது, பூமியில் உள்ள கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. இருப்பினும், சுற்றுக்கலமானது வெற்றிகரமாக தொடர்ந்து தன் பணியை மேற்கொண்டு வருகிறது.

**3) கோவிட் 19 தொற்றுநோய் உலகம் முழுவதும் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், நெருக்கடியை வெல்ல தொழில்நுட்ப முன்னேற்றங்கள் உடனடியாக பயன்படுத்தப்படுகின்றன. தொற்று நோயை சரிசெய்ய தொழில்நுட்பம் எவ்வாறு பயன்பட்டது என்பதை விவரிக்கவும்**

**அறிமுகம்** 1

- கோவிட்-19 தொற்றுநோய் பொருளாதாரம் மற்றும் அரசியலில் மிகப் பெரிய ஆதாரமாகும் பயோமெடிக்கலும் கலந்துள்ளது.
- வேகமாக பரவும் திறன் மற்றும் மனித வாழ்வில் தீய விளைவுகள் காரணமாக மனித வரலாற்றில் நெருக்கடிகளை சந்திக்கின்றன.

**பொருளாதார தாக்கங்கள்** 2

- 1MF-இன் படி உலகளாவிய பொருளாதாரம் 4.4% சுருங்குகிறது.
- ILO-வின்படி 1.6 பில்லியன் முறைசாரா பொருளாதார தொழிலாளர்கள் 60% பாதிக்கப்பட்டுள்ளனர்.
- ILO-வின்படி 80% முறைசாரா துறை வேலை இழந்துள்ளது.
- பொதுமுடக்கம் மற்றும் கட்டுப்பாடுகள் விநியோகச் சங்கிலிகளை பாதித்தன.
- விநியோக இடைவெளிகள் வெளிப்பட்டன.
- அத்தியாவசியப் பொருட்களின் கையிருப்பு - தேவை அதிகரிப்பு
- அத்தியாவசியமற்ற பொருட்களின் தேவையில் வீழ்ச்சி ஏற்பட்டது.
- வணிக நடவடிக்கைகளில் சரிவு காரணமாக ஜிஎஸ்டி வசூல் & வரிவசூல் குறைந்துள்ளது.

**அரசியல் தாக்கங்கள்** 2

- சட்டமன்ற நடவடிக்கைகள் இடைநிறுத்தம்
- பல அரசியல்வாதிகளின் தனிமைப்படுத்துதல் (அல்லது) மரணங்கள்
- வைரஸ் பரவும் என்ற அச்சம் காரணமாக தேர்தல்களை மீண்டும் திட்டமிடுதல்
- கூட்டாட்சியின் தாக்கம்
- எ.கா : மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான சண்டை

**சமூகத்தின் மீதான தாக்கங்கள்** 2

- WHO-வின் படி கோவிட் இறப்பு 195.2 மில்லியன்
- அதிகரித்த வறுமை
- பத்திர பாதுகாப்பின்மை
- மூடப்பட்ட கல்வி நிறுவனங்கள்
- அதிக சுமை கொண்ட சுகாதார அமைப்பு
- உருவற்ற உள்ளார்ந்த எதிர்ப்புகள்
- பெண்களுக்கு ஏற்றத்தாழ்வு பாதுகாப்பு

**சுற்றுச்சூழல் மீதான தாக்கங்கள்** 2

- பிபிஇ வழிகளின் உயிர் மருத்துவக் கழிவு நெருக்கடி உயர்வு
- துப்புரவு பணியாளர்கள் மற்றும் குப்பை சேகரிப்பவர்களுக்கு உடல்நலக்கேடு.
- 1/2 மில்லியன் துப்புரவு பணியாளர்கள் கோவிட்-19 ஆல் பாதிக்கப்பட்டனர்

**தொற்றுநோய் மேலாண்மைக்கு உதவும் தொழில்நுட்பம்** 6

**கோவிட்-19 கருவிகள்**

**ACT முடுக்கி**

- உற்பத்தி மற்றும் கோவிட் 19 சோதனைகள், சிகிச்சைகள் மற்றும் தடுப்பூசிகளுக்கு சமமான அணுகல்

**ஆரோக்கிய சேது**

- புளூடூத் ட்ராக் கோவிட் 19
- கோவிட்-19 நோயாளிகளை கண்டஷூதல்

**PM புதுமையான சவால்**

- புதுமையான தொழில்நுட்பத்தை வழங்க ஸ்டார்ட்அப்கள், தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள்

**கோ-வின்**

- கோவிட் தடுப்பூசி விநியோக முறைக்கான டிஜிட்டல் தொழில்நுட்ப தளம்

**CRISPR டாடா**

- கோவிட்-19க்கான உலகின் முதல் கண்டறியும் சோதனை
- செயற்கை நுண்ணறிவால் இயக்கப்பட்ட கொரோனா ஹெல்ப்டெஸ்ட்

**RT-PCR சோதனை**

- அதன் மரபணு கைரேகையின் அடிப்படையில் வைரஸ் இருப்பதைக் கண்டறியும்.

**பிரண-வாயு**

- உள்நாட்டு வென்டிலேட்டர்கள்

**விரைவான ஆன்டிபாடி கண்டறிதல்**

- ஒரு நோய் எந்த அளவிற்கு பரவியுள்ளது என்பதை விவரிக்கிறது.

**கோவிட்-19 BWM**

- பயோமெடிக்கல் கழிவு கண்காணிப்பு மொபைல் பயன்பாடு

**4) நானோ தொழில்நுட்பம் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? நானோ தொழில்நுட்பம் என்பது பொறியியல் மற்றும் அறிவியலின் பல பிரிவுகளாக உள்ளடக்கிய ஒரு இடைநிலைத் துறையாகும் - அதை நிரூபிக்க 2**

- நானோ தொழில்நுட்பம் அல்லது சுருக்கமாக நானோடெக் என்பது அணு, மூலக்கூறு மற்றும் அதி மூலக்கூறு அளவீடுகளில் பொருளைக் கையாளுவதை உள்ளடக்கிய தொழில்நுட்பமாகும்.
- 1 முதல் 100 நானோமீட்டர் அளவிலான துகள்களை உள்ளடக்கியது.

**மின்னணு தொழிற்சாலை 1**

- **நானோ சீரற்ற அணுகல் நினைவகம் :** இது ஒரு சிப் போன்ற மூலக்கூறில் படிந்து காணப்படும் கார்பன் நானோகுழாய்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிலையற்ற சீரற்ற அணுகல் நினைவகமாகும்.
- இது சிறிய அளவு அதிகபட்ச அடர்த்தி நினைவுகளை அனுமதிக்கிறது.
- **நானோ ஆப்டோ மெக்கானிக்கலின் நிலையான ரேண்டம் அணுகல் நினைவகம் (நிலையான ) :** இது சிறிய அளவு அதிக அடர்த்தி நினைவுகளை ரேண்டம் அணுகல் நினைவகம் (நிலையான) : இது நினைவகத்துடன் ஒப்பிடும்போது வேகமாக படிக்கும் / எழுதும் நேரத்தை காட்டுகிறது.
- மேலும் செயல்முறைகள் குறுக்கீடு இல்லாமல் நடைபெறுகின்றன.
- இது ஒரு பாரம்பரிய மின்சார இயக்கப்பட்ட உடன் ஒப்பிடும்போது நேரத்தை மேலும் குறைக்கிறது.

**சுகாதாரம் மற்றும் மருத்துவம் 2**

- மாரடைப்புக்கான நானோடெக் கண்டுபிடிப்பான்கள்
- தமனிகளில் அடைப்பை சரிபார்க்க நானோசிப்கள்
- கண் அறுவை சிகிச்சை ; கீமோதெரபி போன்றவற்றுக்கான நானோகேரியர்கள்
- இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும் நீரழிவு பட்டைகள்
- மூளைக்கு மருந்து வழங்குவதற்கான நானோ துகள்கள் – நரம்பியல் கோளாறுகளுக்கான சிகிச்சை
- நானோஸ்பாஞ்ச்சுகள் - இரத்த சிவப்பணு சவ்வுடன் பூசப்பட்ட பாலிமர்நானோ துகள்கள், நச்சுகளை உறிஞ்சி அவற்றை இரத்த ஓட்டத்தில் இருந்து அகற்ற பயன்படுகிறது.
- நானோ எரிப்புகள் - இரத்த ஓட்டத்தில் புற்றுநோய் செல்களைக் கண்டறியப் பயன்படுகிறது.
- நானோ துளைகள் - DNA வரிசைமுறையை மிகவும் திறம்பட உருவாக்கப் பயன்படுகிறது.

**ஆற்றல் 1**

- **சூரிய வண்ணப்பூச்சுகள் அல்லது ஒளிமின்னழுத்த வண்ணப்பூச்சுகள்** - சோலார் பேனல்களை மாற்றலாம். எந்த மேற்பரப்பிலும் சோலார் வண்ணப்பூச்சுகளைப் பயன்படுத்துவது சூரியனிலிருந்து ஆற்றலைப் பிடிக்கவும் அதை மின்சாரமாக மாற்றவும் உதவும். இதை வீடுகள் மற்றும் கார்களில் பயன்படுத்தலாம்.
- **காற்றாலை மின் உற்பத்திகள்** - நானோ ஜெனரேட்டர்கள் - இவை நெகிழ்வான மெல்லிய தாள்கள், அவை வளைத்தால் சாத்தியமான சக்தியை உருவாக்க முடியும்.
- **நானோபேட்டரிகள்** - ரீச்சார்ஜபிள் லித்தியம் - அயன் பேட்டரிகள் நீண்டகாலம் நீடிக்க உதவும்.

**வேளாண்மை மற்றும் உணவு 1**

- நானோ உரங்கள்
- கலப்பின பாலிமர்கள் பேக்கேஜிங்கிலும் கெட்டுப்போவதைக் குறைக்கிறது.
- உணவில் பரவும் நோய்க்கிருமிகளுக்கான நுண்ணுர்வு கருவிகள்
- உற்பத்தியில் பாக்டீரியாவை குறைக்க - நானோகுழம்புகள்
- டைட்டானியம்-டை-ஆக்சைடை அடிப்படையாகக் கொண்ட நானோ துகள்கள் நுண்ணுயிர் எதிர்ப்புகளாகப் பயன்படுத்தப்படுகிறது.

**இரசாயன பாதுகாப்பு 1**

- இரசாயன ஆயுத பயங்கரவாதத்தின் அரங்கில் மற்றும் இரசாயன முகவர்களின் பயன்பாட்டிற்கு எதிராக நானோ தொழில்நுட்பம் தீர்வுகளை வழங்குகிறது.
- சில நானோ துகள் ஆக்சைடுகள் நுண் துகள்களை விட மிக வேகமாக இத்தகைய இரசாயனங்களுடன் தொடர்பு கொள்கின்றன மற்றும் அத்தகைய இரசாயனங்கள் விரைவாக சிதைவதற்கு மிகவும் பொருத்தமானவை.
- வளிமண்டலத்தில் உள்ள நரம்பு-வாயு முகவர்களைக் கண்டறிவதற்கான உணர்திறன் சாதனம் நானோ தொழில்நுட்பப் பயன்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

SURESH'

**வழக்கமான ஆயுதங்கள்/வெடிமருந்து** 1

- நானோ தொழில்நுட்பம் அடிப்படையிலான வலுவான மற்றும் இலகுவான பொருட்கள் குறைந்த நிறை கொண்ட வழக்கமான பீப்பாய் வகை ஆயுதங்களை உருவாக்க அனுமதிக்கும்.
- சிறிய ஆயுதங்கள் மற்றும் இலகுரக ஆயுதங்கள் நானோ இழை கலவைகளால் செய்யப்பட்ட பீப்பாய்கள், பூட்டுகள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம் என்பது கற்பனைக்குரியது.
- பாயும் மற்றும் காற்றை சுவாசிக்கும் ஏவுகணைகளைப் பொறுத்தமட்டில் கூட, மீண்டும் குறைக்கப்பட்ட நிறை வேகம், வீச்சு அல்லது சுமை தாங்கியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் கேரியர் அளவைக் குறைப்பதாக மொழிபெயர்க்கலாம்.

**கடல்சார் பயன்பாடுகள்** 1

- மைக்ரோ மற்றும் நானோ அளவிலான மின்னணுவியல் தொகுப்புகள், தற்போது செயல்படும் அதிர்வுகளை, அதிக மின்னோட்ட அடர்த்தி, அதிக சக்தி மற்றும் அதிக வெப்பநிலை சுமைகள் ஆகியவற்றின் விளைவாக மிகவும் கடுமையான நிலைமைகளின் கீழ் நம்பகத்தன்மையை பராமரிக்க வாய்ப்புள்ளது.
- தரப்படுத்தப்பட்ட நானோகலவைகள் போன்ற தயாரிப்புகள் நானோ தொழில்நுட்பத்தில் செயல்பாட்டுப் புதுமைகளை வேரிலிருந்து நுனிவரை கடற்படைக்கு கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகளுக்கு அற்புதமான எடுத்துக்காட்டுகள். அதே நேரத்தில் செலவுகளைக் குறைப்பதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது.
- கப்பல்கள், மீன்பிடி படகுகள், செல்லக்கூடிய கால்வாய்கள் மற்றும் பாதுகாப்பான வாகனங்களை வரையறுக்க நானோ துகள்கள் பயன்படுத்தப்படலாம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.
- படிகங்கள் வண்ணப்பூச்சுகள், எரிப்பொருள்கள், மசகு எண்ணெய், சிறப்பு இரசாயனங்கள், பசைகள் போன்றவற்றில் கரையக்கூடியவை, ஆனால் அவற்றை வடிவமைத்த அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தைத் தவிர வேறு யாராலும் எளிதில் போலியாக்கவோ, அகற்றவோ அல்லது மாற்றவோ முடியாது.

**விண்வெளி மற்றும் பிற பாதுகாப்பு பயன்பாடுகள்** 1

- குறைவாக பாதிக்கப்படக்கூடிய அரிக்கும் பொருள் செயற்கைக்கோள் உருவாக்கத்திலும் உதவியாக இருக்கும்.
- மேலும் அத்தகைய கட்டமைப்பு பொருள்கள் மற்றும் நானோ தொழில்நுட்பத்தால் அடையப்பட்ட சிறுமயமாக்கல் ஆகியவை அடுத்த தலைமுறை ஆளில்லா வான்வழி வாகனங்கள்/ஆளில்லாபோர் விமானங்கள் வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கும்.

**நானோ தொழில்நுட்பத்தின் விண்வெளி பயன்பாடுகள்**

**பற்றவைப்பவர்களின் வாழ்க்கை** 1

- செயற்கைக்கோளின் ஆயுள், பெரிய அளவில், அவை கப்பலில் எடுத்துச் செல்லக்கூடிய எரிபொருளின் அளவைக்கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.
- கப்பல் பற்றவைப்பான்கள் விரைவாக தேய்ந்துவிடும் மற்றும் செயல்திறனுடன் செயல்படுவதை நிறுத்துகின்றன.
- நானோ படிகங்களில் மின்னிழையம் – டைட்டானியம் டைபோரைடு
- தாமிர கலவை போன்ற நானோ–பொருள்கள், பற்றவைப்பவரின் வாழ்க்கை மற்றும் செயல்திறன் பண்புகளை மேம்படுத்துவதற்கான சாத்தியமானவைகள்.

**குறைந்த எடை சோலார் பேனல்கள்/செல்கள்** 1

- உள் எரிபொருளை தவிர, விண்வெளியில் உள்ள செயற்கைக்கோள்கள் பல்வேறு செயல்பாடுகளுக்கு சூரிய சக்தியை சக்தி மூலமாகப் பயன்படுத்துகின்றன.
- இத்தகைய சூரிய மின்கலங்களின் எடையைக் குறைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடிப்பதில் செயற்கைக்கோள் வடிவமைப்பாளர்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.
- விண்வெளி விஞ்ஞானிகள் நானோ மூலப்பொருட்களை தங்கள் வழக்கமான சகாக்களுக்கு மாற்றாக மாற்ற முயற்சிக்கின்றனர்.

**விண்வெளிக் கப்பல்களின் ஏரோஜெல்களின் பயன்பாடு** 1

- ஏரோஜெல் போன்ற இலகுவான நானோதுறை பொருட்கள் விண்கலம் தயாரிப்பில் பரந்த பயன்பாட்டுடன் காணப்படுகின்றன.
- சில பிரத்யேக இலகுவகை உடைகள், ஜாக்கெட்டுகள் போன்றவை கூட ஏரோஜெல்களைப் பயன்படுத்தி செய்யப்படலாம்.
- ஏரோஜெல் என்பது அரைதிண்மக் கரைசலிலிருந்து பெறப்பட்ட குறைந்த அடர்த்தி கொண்ட திட–நிலைப் பொருளாகும். இதில், ஜெல்லின் திரவ கூறு வாயுவால் மாற்றப்படுகிறது.
- இதன் விளைவாக, மிகக் குறைந்த அடர்த்தி கொண்ட திடப்பொருளானது, மிகவும் குறிப்பிடத்தக்க பண்புகளைக் கொண்டது. குறிப்பாக கடத்தாப் பொருளாக செயல்படுகிறது.
- அவை நுண்துளைகள் மற்றும் மிகவும் இலகுவானவை, ஆனால் அவை அவற்றின் எடையை விட 100 மடங்கு தாங்கும்.

**விண்வெளி வானிலை முன்னறிவிப்பு** 1

- பூமிக்கு அருகில் உள்ள விண்வெளி வானிலை மற்றும் சூரிய விண்வெளி சுற்றுச்சூழல் விண்வெளி ஆராய்ச்சிக்கு முக்கியமானது.
- அயனி மண்டலம் மற்றும் பிற விண்வெளி மண்டலங்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதில் கட்டமைக்கப்பட்ட நானோ நுண்ணுணர்வுக் கருவி அடிப்படைப் பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5) **இந்தியாவில் 5G தொழில்நுட்பத்தின் சவால்கள் மற்றும் நன்மைகளை விவாதி.**

**5G தொழில்நுட்பம்** 2

- இயந்திரங்கள், பொருள்கள் மற்றும் சாதனங்கள் உட்பட அனைத்தையும் ஒன்றாக இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட புதிய வகையான நெட்வொர்க் ஆகும்.

SURESH

**சிறப்பியல்புகள்** 4

- மில்லிமீட்டர் அலைக்கற்றை (30-300GH$_2$) அதில பல்முனை ஜிபிபிஎஸ் உச்ச தரவு வேகத்தை வழங்குகிறது.
- 20 ஜிபிபிஎஸ் (வினாடிக்கு ஜிகாபிட்ஸ்) வேகம்.
- மிகக் குறைந்த தாமதம்
- அதிக நம்பகத்தன்மை
- மிகப்பெரிய நெட்வொர்க் திறன்
- அதிகரித்த இருப்பு தன்மை
- அதிக பயனாளிகளுக்கு சீரான பயனர் அனுபவம்




**தகவல் தொடர்புத் துறைக்கான 5G-யின் நன்மைகள்**

- 2035-ம் ஆண்டுக்குள் இந்தியாவில் 1 டிரில்லியன் டாலர் ஒட்டுமொத்த பொருளாதார தாக்கத்தை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- தொலைத் தொடர்பிற்கான செயல்முறை வடிவமைப்பாளரான எரிக்சன் கருத்துப்படி, இந்தியாவில் 5G இயக்கப்பட்ட டிஜிட்டல்மயமாக்கல் வருவாய் திறன் 2026 ஆம் ஆண்டளவில் 27 பில்லியன் டாலருக்கு அதிகமாக இருக்கும்.
- உலகளாவிய தொலைத்தொடர்பு துறை ஜிஎஸ்எம்எ 2025-ம் ஆண்டிற்குள் இந்தியா சுமார் 70 மில்லியன் 5G இணைப்புகளைக் கொண்டிருக்கும்.
- இண்டர்நெட் ஆஃப் திங்ஸ் மற்றும் இயந்திரத்திற்கும் இடையிலான தொடர்பு போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் முதுகெலும்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ஓட்டுநர் இல்லாத வாகனங்கள், தொலை அறுவை சிகிச்சை, நிகழ் நேர தரவு பகுப்பாய்வு உள்ளிட்ட பயன்பாடுகள் மற்றும் சேவைகளை ஆதரிக்கிறது.

**முதன்மை பயன்பாடுகள்** 3

- சென்சார் உட்பொதிக்கப்பட்ட நெட்வொர்க், உற்பத்தி, நுகர்வோர்பொருட்கள், விவசாயம் பற்றிய தகவல்களை நிகழ்நேரத்தில் வெளியிட அனுமதிக்கும்.
- வாகனத்திலிருந்து வாகனம் மற்றும் வாகனத்திலிருந்து உள்கட்டமைப்பு தொடர்பை செயல்படுத்துதல் எ.கா. ஓட்டுனர் இல்லாத கார்கள்.

**பொருளாதார அடிப்படையில் உள்ள சவால்கள்**

- **அதிர்வெண் ஒதுக்கீடு :** சர்வதேச ஆப்ரேட்டர்களுடன் ஒப்பிடுகையில் இந்திய ஆப்ரேட்டர்கள் அலைக்கற்றை மிகவும் குறைவாகவே கொண்டுள்ளனர். அதிக முதலீட்டு செலவு, டெலிகாம் நிறுவனங்களை முதலீட்டின் மீதான வருமானம் குறித்து நிச்சயமற்றதாக ஆக்குகிறது.

**நெட்வொர்க் முதலீடு**

- இந்தியாவில், டெலிகாம் துறையானது மூலதன பெருக்க சிச்கல்களை எதிர்கொள்கிறது. அவை தீர்க்கப்பட வேண்டும்.

**முதலீட்டிற்கான நிதி கிடைக்காத நிலை**

- இந்திய ஆப்ரேட்டர்கள் பலர் கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ளது.
- டெலிகாம் ஆப்ரேட்டர்கள் ஏலத்தில் பங்கேற்க தயக்கம் காட்டுகின்றனர். ஒரு மெகா ஹெர்ட்ஸ் கையிருப்பு விலை ரூ.490 கோடி அதிகமாக விலை உள்ளது மற்றும் சலுகையில் உள்ள அலைக்கற்றை அளவு போதுமானதாக இல்லை.

**ஒழுங்குமுறை கட்டுப்பாடுகள்** 4

- முந்தைய தொழில்நுட்ப முதலீடுகள் திரும்பப் பெறப்படாதபோது புதிய தொழில்நுட்ப அறிமுகத்தின் வேகமான சுற்றுகள் மேலும் சிக்கலைச் சேர்க்கின்றன.

**தொழில்நுட்ப சவால்கள்**

- உலகளவில் பயன்படுத்தக்கூடிய தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பை வடிவமைப்பது, பல்வேறு பகுதிகளுக்கு உள்ளூர்மயமாக்கப்பட்ட தொழில்நுட்பத்தை அனுமதிப்பது சவாலானது.

**அரசாங்கச் சலுகைகள் இல்லாமை**

- குறிப்பாக கோவிட்-19 மந்தநிலைக்குப் பிறகு, அதன் வருவாயில் அதிகரித்து வரும் அழுத்தத்தக் கருத்தில் கொண்டு, வருவாயை துறக்க அரசாங்கத்திற்கு ஊக்கம் இல்லை.

**ஊக்கமற்ற வரிக் கொள்கை**

- உரிமக் கட்டணங்களுக்கான சரிசெய்யப்பட்ட மொத்தவருவாயில் 6% மற்றும் ஸ்பெக்ட்ரம் பயன்பாட்டுக் கட்டணங்களுக்கு 3% என்ற தற்போதைய நிலையான விகிதம் தொலைத்தொடர்பு வழங்குநர்களை புதிய தொழில் நுட்பங்களில் முதலீடு செய்வதைத் தடுக்கிறது.

**மோசமான ஏல வடிவமைப்பு**

- மதிப்புமிக்க ஸ்பெக்ட்ரம் செயலற்றதாக இருப்பதை உறுதி செய்கிறது. இதில் 5Gஅலைக்கற்றை, 700 மெகா ஹெர்டஸ் மற்றும் 3.5 ஜிகா ஹெர்ட்ஸ் மற்றும் மிகவும் விரும்பப்படும் இ மற்றும் பி பட்டைகள் ஆகியவை அடங்கும்

**முன்னோக்கிய பாதை** 2

- 5G தொழில்நுட்பத்துடன் டிஜிட்டல் இந்தியாவை சீரமைக்க வேண்டும்.
- இந்தியாவில் 5G தொழில்நுட்பங்கள், தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும்.
- செயலற்ற அலைக்கற்றை குறைந்தபட்சம் குறிப்பிடத்தக்க வருவாயை உருவாக்கும் வரை விடுவிக்கப்பட வேண்டும்.
- நிதி ஒதுக்கீடு மற்றும் உள்ளூர் தொழில் நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்களின் உள் திறன்களை மேம்படுத்த ஊக்குவிக்கவும், இது நாட்டில் 5G தொழில்நுட்பம் வெற்றி பெற உதவும்.
- இந்த வடிவமைப்பு மற்றும் உற்பத்தி திறன்களை செயல்படுத்தும் 5G ஸ்டார்ட் அப்களை ஊக்குவித்தல்.

- மேலே உள்ள வடிவமைப்புகளை ஆதரிக்கும் IPR உருவாக்கத்தை ஊக்குவித்தல்.
- அலைக்கற்றை திறமையான பயன்பாட்டிற்கு வெகுமதி அளித்தல்.
- குறுகிய - அலைக்கற்றை நெட்வொர்க்குகளை மேம்படுத்துதல்.
- சந்தைகளின் வளர்ச்சி
- 5G சிப்களின் உற்பத்திக்கு பெரிய அளவில் முதலீடு தேவைப்படலாம்.
- இந்திய தொழில்நுட்ப சுற்றுச்சூழல் அமைப்பு 5Gல் ஒரு விளிம்பைக் கொண்டிருப்பதை செயல்படுத்துவதற்கும் உதவுவதற்கும் பொருத்தமான சோதனை படுக்கைகள் மற்றும் தொழில்நுட்ப தளங்கள் ஏற்படுத்துதல்.
- நகர்ப்புற இந்தியா முழுவதும் 10 ஜிபிபிஎஸ் மற்றும் கிராமப்புற இந்தியா முழுவதும் 1 ஜிபிபிஎஸ் 100% கவரேஜ் கொண்ட அடுத்த தலைமுறை எங்கும் நிறைந்த அல்ட்ரா-ஹை பிராட்பேண்ட் உள்கட்டமைப்பின் துரிதப்படுத்தல்.
- கவரேஜ், நம்பகத்தன்மை மற்றும் அளவிடுதல் ஆகியவை உகந்ததாக இருக்க வேண்டும் மற்றும் தடையற்ற தொலைபேசி நெட்வொர்க்குகளுக்கு நிலையான தரநிலைகளை உறுதிப்படுத்த ஒரு ஒருங்கிணைந்த நிர்வாகக் கொள்கை தேவைப்படும்.

**6) தொலை நுண்ணுணர்வு என்றால் என்ன? அதன் கூறுகளை விவரி?**

**அறிமுகம்** 1

- புவித் தகவலியல் என்பது இடம் சார் தகவல்கள் குறித்து விளக்கும் தொலை நுண்ணுர்வு, உலகளாவிய ஊடுருவல் செயற்கைக்கோள் அமைப்பு (GNSS) மற்றும் புவித்தகவல் தொகுப்பு (GIS) போன்றவை ஒருங்கிணைந்த ஒரு பாடப்பிரிவாகும்.
- புவி தகவலியல் கூறுகளின் அடிப்படை புரிதலானது நில அளவாய்வு, போக்குவரத்து, நீரியல், பேரிடர் மேலாண்மை போன்றவற்றை மேற்கொள்வதில் முக்கியப் பங்காற்றுகிறது என்பதாகும்.

**தொலை நுண்ணுணர்வு** 2

- தொலை நுண்ணுணர்வு என்பது புவிசார் பொருட்களைப் பற்றித் தகவல்களை புகைப்படக்கருவி மற்றும் உணர்விகளின் மூலம் சேகரிக்கும் ஒருங்கிணைந்த கலை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவாகும்.

**தொலை நுண்ணுணர்வின் கூறுகள்** 6

**1. ஆற்றல் மூலம்**

- தொலை நுண்ணுணர்வின் முக்கிய தேவையானது மின்காந்த கதிர்வீச்சை இலக்கு நோக்கி செலுத்தும் ஆற்றல் மூலமாகும். இந்த ஆற்றலை அளிப்பது சூரியன் ஆகும். புவியால் பிரதிபலிக்கப்படும் சூரிய ஆற்றலை புகைப்படக் கருவிகள் மற்றும் படச்சுருள்கள் பதிவு செய்கின்றன.

**2. கதிர்வீச்சு மற்றும் வளிமண்டலம்**

- ஆற்றலானது இலக்கை ஒளியூட்டம் செய்ய வேண்டும். இவ்வாற்றலானது மின்காந்த கதிர்வீச்சாகும். இக்கதிர்வீச்சு விண்வெளியில் ஒரு குறிப்பிட்ட வேகத்தில் அலைவடிவில் முனைப்புடன் பரவக்கூடிய ஒரு ஆற்றலாகும்.

**3. இலக்குடனான இடைவினை**

- தொலை நுண்ணுணர்வில் இலக்குடனான மின்காந்த கதிர் வீச்சின் இடைவினையானது இரு காரணங்களுக்காக முக்கியமானதாகும். முதலில், தகவல் கடத்தும் மின்காந்த கதிர்வீச்சு புவிப்பரப்பால் பிரதிபலிக்கப்பட்டு வளிமண்டலத்தின் வழியே கடக்கும்போது மாற்றியமைக்கப்படுகிறது.
- இரண்டாவதாக, மின்காந்த கதிர்வீச்சின் வளிமண்டலத்துடனான இடைவினை வளிமண்டலம் குறித்த தகவல்களை சேகரிப்பதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. மொத்த ஆற்றலானது ஒளிச்சிதறடிப்பு, உட்கிரகிப்பு மற்றும் ஒளி விலகல் போன்ற இயற்கை செயல்பாடுகளின் மாறுபாடுகளுக்கு உட்பட்டது.

**4. உணர்விகளின் ஆற்றலை புதிவுசெய்தல்**

- புவியினால் திருப்பி அனுப்பப்பட்ட மின்காந்த கதிர்வீச்சைச் சேகரிக்கவும் பதிவு செய்யவும் உணர்வி தேவைப்படுகிறது.
- உணர்வியானது அனைத்து அலைநீளக் கதிர்வீச்சுகளையும் பதிவு செய்யும் திறன் பெற்றிருப்பதால் அனைத்து இடம் சார் தரவுகளையும் தெளிவாக தருகின்றது.

**5. செலுத்துதல், ஏற்றல் மற்றும் செயல்முறைப்படுத்துதல்**

- உணர்வியினால் பதிவு செய்யப்பட்ட ஆற்றலானது மின்னணு வடிவல் புவிக்கு செலுத்தப்படுகிறது. இதன் மூலம் கிடைக்கப்பெறும் தகவல்கள் முறைப்படுத்தப்பட்டு செயல்முறைப்படுத்தப்படும் நிலையங்களில் செயற்கைக்கோள் பதிமமாக தயாரிக்கப்படுகிறது.-பதிம முறைப்படுத்துதல் மூன்று வகையாக பிரிக்கப்படுகிறது. அவை பதிம மீட்பு (Image Restoration), பதிம மேம்பாடு மற்றும் தகவல் ஈட்டல் (Information Extraction).

**6. விவரணம் மற்றும் ஆய்வு**

- பதிமத்தில் உள்ள தகவல்களை அடையாளம் கண்டு அவற்றின் முக்கியத்துவத்தை அறிதலே பதிம விவரணமாகும்.
- விவரணம் செய்பவர் தொலை நுண்ணுணர்வு தரவுகளை ஆராய்ந்து அவற்றை அடையாளம் கண்டு சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்து சுற்றுச்சூழலுக்கும் கலாச்சார காரணிகளுக்கும் இடையேயான தொடர்பை வெளிக்கொணர்வதே விவரணம் செய்தலின் முக்கிய நேக்கமாகும்.

**வட்டார தொலை நுண்ணுணர்வு சேவை மையங்கள்** 2

- நாட்டின் தேவை மற்றும் இயற்கை வள மேலாண்மையின் முக்கியத்துவம் ஆகியவற்றைகாண இந்திய அரசாங்கம் "தேசிய இயற்கை வள மேலாண்மைத் தொகுதி" (National Natural Resources Management System) என்ற ஒரு அமைப்பினை ஏற்படுத்தியது.

SURESH

**நோக்கங்கள் மற்றும் பணிகள்** 3

- பதிம எண்களின் பகுப்பாய்வு மற்றும் புவியியல் தகவல் தொகுப்பினை மக்களுக்கு அளித்தல்.
- பதிம எண்களின் பகுப்பாய்வு நுட்பங்கள் மற்றும் புவியியல் தகவல் தொகுப்பினை பயன்படுத்துவோருக்கு உதவியாக அல்லது வழிகாட்டியாக இருத்தல்.
- புதிய துறைகளிலும் இந்நுட்பத்தை வளர்த்தல்
- தொலை நுண்ணுணர்வினை பயன்படுத்தும் முகவர்கள், எண் நுட்பங்கள், புவியியல் தகவல் தொகுதி மற்றும் இதனை சார்ந்த ஆய்வாளர்களுக்கு பயிற்சியளித்தல்.
- தேசிய திட்டங்கள் மற்றும் தொலை நுண்ணுணர்வு முன்னேற்றத்திற்கு உதவுதல்.

**தொலை நுண்ணுணர்வின் பயன்பாடுகள்**

**1. வேளாண்மை**

- செயற்கைக்கோள்கள் மறுபார்வையிடுதல் சுழற்சியின் மூலம் ஒரு சிறு வயல் முதல் பெரிய நாடு வரையிலான பரப்பளவிற்கான தகவல்களை சேகரிக்கும் திறன் படைத்தது.
- இதன் மூலம் வயல் சார்ந்த தகவல்களான பயிர் அடையாளம், பயிரிடப்பட்ட பரப்பு, பயிர்களின் நிலை அல்லது திறன் போன்ற தகவல்களை பெறலாம்.

**2. வனமேலாண்மை**

- காட்டுத்தீ, காடுகள் அழிப்பு, காடுகள் ஆக்கிரமிப்பு போன்றவை சமீப காலமாக சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு மிகவும் சவாலாக உள்ளன. இச்செயல்களை சுலபமாக அடையாளம் கண்டு இவைகளை தடுப்பதற்கு செயற்கைக்கோள் பதிமங்கள் உதவிகரமாக உள்ளன.

**3. மண்ணியல்**

- பாறைகள் சார்ந்த வரைபடம் தயார் செய்தல்
- புவிப்பேரிடர் படம் வரைதல் போன்றவையாகும்.

**4. பேராழியியல்**

- கடற்கரை பிரதேச மேலாண்மையில் தொலை நுண்ணுணர்வின் பங்கு மிகவும் முக்கியமான ஒன்று. பாத்திமெட்ரிக் போல (கடல் ஆழத்தின் அளவு மற்றும் அவற்றின் அமைவிடத்தை கண்டறிய) இப்பகுதியில் கடலின் ஆழத்தை கண்காணித்தல், தாவரப்பச்சையத்தின் அளவு மற்றும் படிந்துள்ள மண்துகள்களின் அளவு போன்றவற்றை அறிந்து கொள்ள உதவுகிறது.

**5. புவிப்படவியல்**

- உயரமான பகுதிகளில் இருந்து அளவாய்வு செய்யப்படும் தொலை நுண்ணுணர்வின் மூலம் நகர்ப்பகுதிகள், கிராமப்பகுதிகள், மலைப்பகுதிகள், பாலைவனங்கள் போன்ற பெரிய பரப்பிற்கான தகவல்கள் பெறப்படுவதால் இவற்றை வரைபடமாக்கும் வரைபட வல்லுனர்களுக்கு எளிதாகின்றது.

**6. வானிலையியல்**

- தொலை நுண்ணுணர்வின் ரேடார் அமைப்பு வானிலை சார்ந்த அடிப்படை தகவல்களை பெற உதவிகரமாக உள்ளது.
- தொலையுணர்வானது ஆளில்லா தொலைத்தோடர்பு செயற்கைக்கோள்களின் மூலம் நிலம் மற்றும் கடல் சார்ந்த வானிலை தகவல்களை சேகரித்து வானிலை மையங்களுக்கிடையேயான தகவல் பரிமாற்றத்திற்கும் துரித தகவல் பரப்புதலுக்கும் வானிலை முன்னறிவிப்பிற்கும் பயன்படுகிறது.

**7. இடவியல்**

- முப்பரிமாண தோற்றமுடைய புவிப்பரப்பின் மீதான நிலத்தோற்றங்களை பதிவு செய்து அவற்றை அடையாளங்காண உதவுவது தொலை நுண்ணுணர்வாகும். தலைப்படங்கள் பொதுவான இயற்கை மற்றும் செயற்கை அம்சங்களை கொண்டுள்ளது.

**8. நகர திட்டமிடல்**

- தொலை நுண்ணுணர்வின் மூலம் நகர்ப்பகுதிகளில் உள்ள இயற்கை, சமூக மற்றும் பொருளாதாரம் தொடர்பாக சேகரிக்கப்படும் தகவல்கள் நகரத் திட்டமிடலுக்கு பயனுள்ளதாகவும், திறன் மிகுந்ததாகவும் விளங்குகின்றது.
- அடிப்படை வரைபடங்களை இலக்கமாக்குதல் (Digitalizing) மூலம் தேவைப்படும் சமயங்களில் இவ்வரைபடங்களை தேவைக்கேற்ப மாற்றியமைக்கவும், மேம்படுத்தவும் இயலும். இரு வேறுபட்ட அளவைகளை கொண்ட இலக்க வரைபடங்களை அடுக்கி ஆய்தலும் இதன் மூலம் சாத்தியமாகின்றது.

**கலாம்சாட்** 1

- இந்தியா 64 கிராம் எடை மட்டுமே கொண்ட புவியின் மிகக் குறைந்த எடை கொண்ட கலாம்சாட் என்ற செயற்கைக்கோளை ஏவி மீண்டும் ஒரு முறை விண்வெளி சாதனையை நிகழ்த்தியுள்ளது.
- இதை வடிவமைத்து உருவாக்கியது விண்வெளி ஆராய்ச்சியை மேற்கொள்ளும் நிபுணரோ அல்லது பொறியாளரோ அல்ல. ஆனால் 18 வயதே நிரம்பிய தமிழ்நாட்டு மாணவன் ரிஃப்பாத்சரூக் மற்றும் அவரது அணியினராகும்.
- சாரூக்கின் இத்திட்டம் முதல் முப்பரிமாண அச்சைக் கொண்டு தயாரிக்கப்பட்டு போட்டியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றாகும்.
- இத்திட்டத்தின் நோக்கம் தொழில்நுட்பத்தின் புதிய செயல்திறனை விண்வெளிக்கு கொண்டு சேர்ப்பதாகும்.

**7) புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் முன்னணி மாநிலம் தமிழ்நாடு – ஆராய்க.** 2

- இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் மிகவும் பன்முகப்பட்ட மின் உற்பத்தித் துறையைக் கொண்டிருக்கும் மாநிலம் தமிழ்நாடு ஆகும். இந்திய மாநிலங்களிடையே புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் முன்னோடி மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் நிறுவப்பட்ட மொத்தத் திறனில் 25.44 சதவீதம் தமிழ்நாட்டின் பங்களிப்பு ஆகும்.
- உலகளவில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் 2022-ஆம் ஆண்டில் அடையக்கூடிய 175 ஜிகாவாட் திறனுடன் இந்தியா முன்னிலை வகிக்கிறது.

- புதுப்பிக்கத் தக்க எரிசக்தி முதலீடுகள், திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் உலகில் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- மேலும் ஒட்டுமொத்தமாக நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனில் உலகளவில் ஐந்தாவது இடத்தில் இந்தியா உள்ளது.
- பருவநிலை மாற்றத்தின் விளைவுகளைத் தணிக்கும் உறுதி மொழிக்கேற்ப தனது செயல் திட்டங்களைச் சீரமைத்துச் செயல்படுத்துவதில் நம் நாடு உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.
- 2030-இல் இந்தியா அதன் நிறுவப்பட்ட திறனில் 60 சதவீதம் தூய்மையான, புதுப்பிக்க வல்ல எரிசக்தி மூலம் கிடைக்கப் பெறுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அகில இந்திய அளவில் நிறுவப்பட்ட ஒட்டுமொத்த 32,730 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனில் சுமார் 8326.86 மெகாவாட் தூய்மையான எரிசக்தியை தமிழ்நாடு வழங்குகிறது.
- இதனால் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் நிறுவப்பட்ட மொத்தத் திறனில் 25.44 சதவீதம் தமிழ்நாட்டின் பங்களிப்பே.

**பின்னணி** 1

- இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் மிகவும் பன்முகப்பட்ட மின் உற்பத்தித் துறையைக் கொண்டிருக்கும் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- தமிழ்நாட்டின் மொத்த மின்சக்தி நிறுவுதிறன் 31,894 மெகாவாட் ஆகும்.
- இதில் கிட்டத்தட்ட 50 சதவீதம் (15,799 மெகாவாட்), புதுப்பிக்கத்தக்க எரிசக்தியிலிருந்தும், 2 சதவீதம் நிலக்கரி அடிப்படையிலான மின் உற்பத்தி மூலமாகவும், 5 சதவீதம் அணுமின் நிலையங்கள் வாயிலாகவும், 3 சதவீதம் எரிவாயு மின் உற்பத்தி மூலமும்,14 சதவீதம் நீண்ட மற்றும் நடுத்தர கால மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் மூலமாகவும், தன்பயன் திட்டங்கள் மூலமாகவும் பெறப்படும் மின் உற்பத்தியையும் உள்ளடக்கியதாகும்.
- ஆண்டு முழுவதும் ஏராளமான சூரிய ஒளி கிடைக்கும் இயற்கை வளத்தைப் பெற்றுள்ள மாநிலம் தமிழ்நாடு.
- இயற்கைக்கு எந்த குந்தகமும் இன்றி தனது வளங்களைக் கணிசமாக அறுவடை செய்ய புதிய உத்திகளையும், தொழில்நுட்ப நடவடிக்கைகளையும் கையாண்டு பல்வேறு வழிமுறைகளைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாக விளங்குகிறது.

**நடைமுறைப்படுத்தும் முகமை** 11

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் முக்கியத்துவத்தையும், நோக்கத்தையும் உணர்ந்து புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கும், பல நல்ல திட்டங்களை செயல்படுத்துவதற்கும் 1985-ஆம் ஆண்டிலேயே தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (Tamil Nadu Energy Development Agency - TEDA) என்ற ஒரு தனி அமைப்பை தமிழ்நாடு அரசு உருவாக்கியது.
- இந்த நிறுவனம் சூரிய, காற்று, உயிரி எரிபொருள் மற்றும் பயோகாஸ், தன்பயன் மின் உற்பத்தி ஆகிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளையும் ஊக்குவிக்கிறது.

**சூரிய சக்தி**

- தமிழ்நாட்டின் நிறுவப்பட்ட சூரியத் திறன் நவம்பர் 2020 நிலவரப்படி சுமார் 3.6 ஜிகாவாட்டாகும்.
- உயர் சூரியக் கதிர்வீச்சு (5.66.0 கிலோவாட் / சதுர மீட்டர் மற்றும் சராசரி 1266.52W/sq.m) மற்றும் ஓர் ஆண்டில் சுமார் 300 நாட்கள் கதிரவனொளி பரவும் வெயில் நாள்களைக் கொண்ட தமிழ்நாட்டில் சூரிய ஒளி பல வகைகளில் பயன்படுத்தவதற்கான பெரும் சாத்தியக்கூறுகள் உள்ளன.
- நிறுவப்பட்ட மொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனில் 1,155 மெகாவாட் சூரிய சக்தியின் பங்களிப்பாகும்.

**உலகின் மிகப்பெரிய சூரிய பூங்கா**

- இந்தியாவில் (54.97 மெகாவாட் சூரிய கூரை உட்பட). 2,500 ஏக்கர் (10 சதுர கி.மீ, 3.9 சதுர மைல்) பரப்பளவில் 2.5 மீட்டர் சூரியசக்தித் தகடுகளைக் (SolarPanels)கொண்ட உலகின் மிகப்பெரிய சூரிய சக்திப் பூங்கா, ராமநாதபுரம் மாவட்டம் கமுதி என்ற இடத்தில் அமைந்துள்ளது
- தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு துறையும் இணைந்து சூரிய ஒளி மூலம் இயங்கும் பம்புகளை விவசாயிகளிடையே ஊக்குவிக்கின்றன. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை சூரிய ஒளி மின்னமுத்த அமைப்புகளை பசுமை இல்லங்களில் நிறுவி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்படுத்துவதை ஊக்குவிப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. சோலார் நெட் மீட்டரிங் வசதி நுகர்வோருக்கு நன்மை பயக்கிறது.

**காற்று சக்தி**

- நாட்டின் மிகப்பெரிய காற்றாலை மின் உற்பத்தித் திறன் நிறுவப்பட்டிருக்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- நாட்டின் மொத்த உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 23 சதவீதம் ஆகும்.
- 2017ஆம் ஆண்டில் சென்னையில் அமைந்துள்ள தேசிய காற்றாலை ஆற்றல் நிறுவனம் (NIWE)வெளியிட்ட மதிப்பீட்டின்படி, இந்தியாவின் கடல்காற்ஷின் மொத்தத் திறன் 302 ஜிகாவாட் (தரை மட்டத்திலிருந்து 100 மீட்டர் உயரத்தில்) என நிர்ணயிக்கப்பட்டது.
- இதில் கிட்டத்தட்ட 35 ஜிகாவாட் திறன் தமிழ்நாட்டுக் கடற்கரைகளில் உள்ளது.
- தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தக் காற்றின் திறன் தரை மட்டத்திலிருந்து 120 மீட்டர் உயரத்தில் 68,750 மெகாவாட் என்று தேசிய காற்றாலை ஆற்றல் நிறுவனம் (NIWE) தெரிவிக்கிறது.
- 2019 - 2020 ஆம் ஆண்டில் சுமார் 11,717 மில்லியன் யூனிட் காற்றாலையிலிருந்து பெறப்பட்ட மின் ஆற்றலை 2020 ஜனவரி வரை தமிழ்நாடு பயன்படுத்தியுள்ளது.

**தமிழகத்தில் காற்றாலை திறன்**

- 8507 மெகாவாட் காற்றாலை மின் நிறுவுதிறன் கொண்டுள்ள தமிழகம், நாட்டில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தியாவில் காற்றாலைகள் மூலம் மொத்தம் 695 ஜிகாவாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்ய சாத்தியம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், தமிழ்நாடு மட்டும் 68 ஜிகாவாட் அளவிற்கு மின் திறன் பங்களிக்க முடியும்.
- தமிழ்நாட்டில் காற்றின் வேகம் 100 மீ மைய உயரத்தில் 8.6 மீ / நொடி முதல் 120 மீ ஹப் உயரத்தில் 9 மீ / நொடி வரை உள்ளது என கணக்கிடப்பட்டுள்ளது.

**காற்றாலைக்கு உகந்த இடங்கள்**

- தமிழ்நாட்டில் காற்று அதிகமாக வீசுவதற்கு சாத்தியமுள்ள, காற்றாலை நிறுவுவதற்கு உகந்த சூழலுள்ள பகுதிகளாக பாலக்காடு, கம்பம், செங்கோட்டை மற்றும் ஆரல்வாய்மொழி கணவாய்கள் கண்டறியப்பட்டுள்ளது.
- உலகின் மூன்றாவது பெரிய கடலோரக் காற்றாலை தமிழ்நாட்டில் உள்ள 1,500 மெகாவாட் திறன் கொண்ட முப்பந்தல் காற்றாலைப் பண்ணையாகும்.
- இந்தப் பண்ணை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.

**காற்றாலை மேம்பாட்டு திட்டம்**

- இந்தியாவில் காற்றாலை மேம்பாட்டுத்திட்டம் 1984இல் தொடங்கியது. அன்று முதல் இன்று வரை காற்றின் ஆற்றலைப் பயன்படுத்துவதில் பல அம்சங்களில் தமிழகம் முன்னோடியாக உள்ளது.
- 1986 ஜனவரியில் தமிழகத்தின் தூத்துக்குடி அருகே முல்லைக் காடு என்ற இடத்தில், நாட்டிலேயே முதல் முதலாக மின் தொகுப்புடன் இணைக்கப்பட்ட காற்றாலை அமைக்கப்பட்டது.
- நாட்டின் முதல் காற்றாலைக் கண்காணிப்பு நிலையம் 1986ஆம் ஆண்டில் பாலக்காடு கணவாய் அருகே கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுல்தான்பேட்டைப் பகுதியில் நிறுவப்பட்டது.
- 1990ஆம் ஆண்டில் தனியார் துறையால் நிறுவப்பட்ட நாட்டின் முதல் காற்றாலைப் பண்ணை தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டது.
- காற்றாலைகளில் ஜி.பி.எஸ் பயன்படுத்திய முதல் மாநிலம் தமிழகம்.
- உலகின் மூன்றாவது பெரிய கடலோரக் காற்றாலைப் பண்ணை கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரல்வாய்மொழியில் அமைந்துள்ள முப்பந்தல் காற்றாலைப் பண்ணையாகும்.

**உயிரி ஆற்றல்**

- இணை உற்பத்தி ஆலைகள், சர்க்கரை ஆலை உற்பத்திக் கழிவுகள் அடிப்படையிலான கோஜெனரேஷன் ஆலைகள், பயோமாஸ் வாயுவாக்கம் சார்ந்த மின் திட்டங்கள் மற்றும் நகராட்சி திடக் கழிவு மற்றும் காய்கறி அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையம் அகியவை தமிழ்நாட்டு அரசால் ஊக்குவிக்கப்படுகின்றன.

**புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிக்கும் திட்டங்கள்**

- பிரதமரின் பசுமை இல்லம் திட்டம், சூரியக் கூரை மூலதன ஊக்கத்திட்டம், காற்று சூரிய இணையமைப்பு மற்றும் சிஷ்ய ஹைட்ரோ / மைக்ரோ ஹைடல் திட்டங்கள் குஷீப்பிடத்தக்கவை.

**மேற்கூரை சூரிய தகடு ஆற்றல் திட்டங்கள்**

- மேற்கூரை சூரிய ஒளி மின்னழுத்த மின் நிலையங்கள்: வீடுகள் மற்றும் அரசு கட்டிடங்களில் மின் தொகுப்புடன் (கிரிட்) இணைக்கப்பட்ட மேற்கூரை சூரியத்திட்டம், மின் தொகுப்புடன் (ஆப்கிரீட்) இணைக்கப்படாத மேற்கூரை சூரிய மின் உற்பத்தி நிலையங்களை நிறுவ தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை உதவுகிறது.
- அரசுத் துறைகள் சார்பாக பல இடங்களில் சூரிய மின் உற்பத்தி நிலையங்களையும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை நிறுவுகிறது.

**முதலமைச்சரின் பசுமை இல்லத் திட்டம்**

- முதலமைச்சரின் பசுமை இல்லம் திட்டமானது, கிராமப்புறங்களில் முக்கியமாக வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களின் நலனில் கவனம் செலுத்துகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், சி.எஃப்.எல் / எல்.ஈ.டி அடிப்படையிலான சூரிய மின்கல (எஸ்பிவி) வீட்டு விளக்கு அமைப்புகள் வழங்கப்படுகின்றன.
- நெசவாளர்கள் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் புதிதாகக் கட்டப்பட்ட வீடுகளுக்கு சி.எஃப்.எல் / எல்.ஈ.டி அடிப்படையிலான வீட்டு விளக்கு அமைப்புகள் வழங்கப்படுகின்றன.
- முதலமைச்சரின் சூரிய மேற்கூரை மூலதன ஊக்கத்திட்டம்: இந்தத் திட்டத்தின் கீழ் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (Ministry of New and Renewable Energy-MNRE)வழங்கும் 30 சதவீத மானியத்துடன் கூடுதலாக ரூ.20,000 மானியத்தை மின் தொகுப்புடன் (கிரிட்) இணைக்கப்பட்ட

SURESH

சூரிய மின்கல மேற்கூரை அமைப்புகளுக்கு தமிழ்நாடு அரசு வழங்குகிறது.

**நீடித்த நிலைத்த எதிர்காலத்தை நோக்கிய செயல்பாடுகள்** 1

- சூரிய சக்திக் கொள்கை : 2023 ஆம் ஆண்டளவில் 9,000 மெகாவாட் நிறுவப்பட்ட சூரியத் திறன் என்ற நோக்கில் சூரிய சக்திக் கொள்கை 2019ஐ தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியது.
- விநியோகிக்கப்பட்ட மற்றும் பயன்பாட்டு அளவிலான ஃபோட்டோ வோல்டாயிக் (பி.வி) உற்பத்தியை ஊக்குவித்தல், 500 மெகாவாட் அல்ட்ரா மெகாசோலார் ஃபோட்டோ வோல்பாயிக் பவர் பார்க் கடலாடி திட்டம் மற்றும் 250 மெகாவாட் மிதக்கும் சூரிய மின்கல திட்டங்கள், 5 மெகாவாட் அளவில் மேற்கூரை அமைப்பு திறன் ஏற்படுத்துவது ஆகியவை இக்கொள்கையின் முக்கியமான செயல்பாட்டுத் திட்டங்களாகும்.
- பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் மூலம் மத்திய மின் பகிர்மானப் பயன்பாடு (சி.டி.யு) இணைப்புடன் 689.01மெகாவாட் திறன் கொண்ட காற்றாலை திட்டங்கள் இயக்கத்தில் உள்ளன.
- மேலும் 1,000 மெகாவாட் திறன் குறுகிய காலத்திலேயே செயல்பாட்டில் வர உள்ளன.

**மின்சார வாகனக் கொள்கை:**

- காற்று மாசுபடுவதைக் குறைத்திடும் வகையில்மின்சார வாகனங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இந்த மின்சார வாகனங்கள் செம்மையாக இயங்கிட மின்கல திறனேற்றல் நிலையங்களை (Battery charging stations) அதிக அளவில் நிறு பல்வேறு பொது / தனியார் நிறுவனங்களை தமிழக அரசு ஊக்குவிக்கிறது.

**8) மனித மரபணுத் திட்டம் என்றால் என்ன? அதன் இலக்குகள், சிறப்பியல்புகள் மற்றும் பயன்பாடுகளைப் பற்றி பட்டியலிடுக.**

**மனித மரபணுத் திட்டம் (மனித ஜீனோம் திட்டம் HGP - Human Genome Project)** 5

- மனிதர்களின் வளர்ச்சி மற்றும் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் மரபணு பொருட்களின் சரியான ஒப்பனையைக் கண்டறியும் ஒரு சர்வதேச முயற்சி ஆகும்.
- சர்வதேச மனித மரபணுத் திட்டம் 1990ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த மாபெரும் திட்டம் நிறைவுற 13 ஆண்டுகள் எடுத்துக் கொண்டது.
- இன்றைய தேதி வரை வரிசைப்படுத்தப்பட்ட உயிரினங்களின் மரபணுவினை விட மனித மரபணுத் திட்டம் 25 மடங்கு பெரியதாகும்.
- இத்திட்டம் 2003இல் நிறைவடைந்தது.
- முதன் முதலில் நிறைவு செய்யப்பட்ட முதுகெலும்பி மரபணு, மனித மரபணுவாகும். மனித மரபணு ஏறத்தாழ 3 X 109 கார இணைகளைக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.
- மனித மரபணு திட்டம் வேகமாக வளர்ந்து வரும் உயிரியலின் புதிய துறையான உயிரி தகவலியலுடன் நெருங்கிய தொடர்புடையது ஆகும்.

**மனித மரபணு திட்டத்தின் இலக்குகள் மற்றும் வழிமுறைகள்**

**மனித மரபணு திட்டத்தின் முக்கிய இலக்குகள்** 3

- மனித டி.என்.ஏவில் உள்ள அனைத்து மரபணுக்களையும் (ஏறத்தாழ 30,000) கண்டறிதல்.
- மனித டி.என்.ஏவை உருவாக்கிய மூன்று பில்லியன் வேதி கார இணைகளின் வரிசையை தீர்மானித்தல்.
- இந்த தகவல்களை தரவுதளங்களில் சேமித்தல்.
- தரவுகளை ஆய்வு செய்வதற்கான கருவிகளை மேம்படுத்துதல்.
- தொடர்புடைய தொழில்நுட்பங்களை தொழிற்சாலைகள் போன்ற பிற துறைகளுக்கு இடமாற்றுதல்.
- இந்த நிமிடத்தில் எழும் அறம், சட்டம் மற்றும் சமூக இடர்பாடுகளைத் (ELSI) தெரிவித்தல்.

**மனித மரபணு திட்டத்தின் சிறப்பியல்புகள்** 3

- மனித மரபணு 3 பில்லியன் நியுக்ளியோடைடு கார மூலங்களைக் கொண்டிருந்த போதிலும், மரபணுவின் 5% மட்டுமே புரதத்தைக் குறியீடு செய்யக்கூடிய டி.என்.ஏ வரிசைகளால் ஆக்கப்பட்டுள்ளது.
- மரபணு சராசரியாக 3000 கார மூலங்களைக் கொண்டுள்ளது. மிகப்பெரிய மனித மரபணு டிஸ்ட்ரோஃபின் (Dystrophin)2.4 மில்லியன் கார மூலங்களைக் கொண்டுள்ளது.
- மரபணுவின் 50% பணி, LINE& ALUவரிசைகள் போன்ற இடமாறும் கூறுகளிலிருந்து பெறப்படுகிறது.
- மரபணுக்கள் 24 குரோமோசோம்களில் பரவியுள்ளது. 19வது குரோமோசோம் அதிக மரபணு அடர்வினைக் கொண்டுள்ளது. 13 மற்றும் Yகுரோமோசோம் ஆகியவை மிகக் குறைந்த மரபணு அடர்வினைக் கொண்டுள்ளன.
- மனித குரோமோசோம் அமைப்பில் மரபணுக்கள் பல்வகைத் தன்மையைக் காட்டுகின்றன.

SURESH

- மரபணு தொகுதியில் 35000 - 40000 மரபணுக்கள் இருந்தாலும், ஏறக்குறைய 99.9 நியூக்ளியோடைடு கார மூலங்கள் அனைத்து மக்களிடமும் ஒரே மாதிரியாக உள்ளன.
- கண்டுபிடிக்கப்பட்ட மரபணுக்களில் 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட மரபணுக்களின் பணிகள் தெரியவில்லை.
- 2 விழுக்காட்டிற்கும் குறைவான மரபணுக்கள் மட்டுமே புரதங்களை குறியீடு செய்கின்றன.
- திரும்ப திரும்ப காணப்படும் வரிசைகள் மனித மரபணுவில் மிகப் பெரிய பகுதியை உருவாக்குகிறது. இந்த வரிசைகள் நேரடியாக குறியீட்டு செயல்களில் பங்கேற்பதில்லை.
- ஆனால், குரோமோசோமின் அமைப்பு, செயல் மற்றும் பரிணாமத்தைத் தீர்மானிக்கிறது (மரபிய பல்வகைத் தன்மை)-1வது குரோமோசோம் 2968 மரபணுக்களை கொண்டுள்ளது.
- அதேபோல் Yகுரோமோசோம் 231 மரபணுக்களை கொண்டுள்ளது.
- மனிதனில் பல்வேறுபட்ட ஒற்றை கார மூல டி.என்.ஏக்கள் காணப்படக்கூடிய 1.4 மில்லியன் இடங்களை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். (SNPs-Single Nucleotide Polymorphisms)
- ஒற்றை நியூக்ளியோடைடு பல்லுருவமைப்பு – இது SNIPS என உச்சரிக்கப்படுகிறது). (SNIPS-ஐ கண்டறிதல், நோய்களுடன் தொடர்புடைய வரிசைகளுக்கான குரோமோசோம் இடங்களை கண்டுபிடித்தல் மற்றும் மனித வரலாற்றை தேடவும் உதவி புரிகிறது.

**<u>பயன்பாடுகள் மற்றும் எதிர்கால சவால்கள்</u>** 3

- மனித குரோமோசோம் வரைபடமாக்கம் ஒருவரின் டி.என்.ஏவை ஆய்வு செய்வதற்கும் மற்றும் மரபிய கோளாறுகளை கண்டறிவதற்கான வாய்ப்பினையும் அளிக்கிறது.
- இது நோய்களை கண்டறிவதற்கும், குழந்தையைப் பெற்றுக்கொள்ள திட்டமிடுபவர்களுக்கான மரபிய ஆலோசனையை வழங்குவதற்கும் பேருதவியாக உள்ளது.
- இந்த வகையான தகவல் புதுமையான மரபணு சிகிச்சைகளுக்கான வாய்ப்புகளை உருவாக்குகிறது. மேலும் மனித உயிரியலைப் பற்றி புரிந்து கொள்வதற்கும், மனிதன் அல்லாதபிற உயிரினங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் தீர்வுக் குறிப்புகளை வழங்குகிறது.
- டி.என்.ஏ வரிசைகள் அதனுடைய இயற்கை திறன்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் அவற்றை உடல்நலம், விவசாயம், ஆற்றல் உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழல் தீர்வு போன்றவற்றில் உள்ள சவால்களைத் தீர்ப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.
- நோய்களின் அறிகுறிகளுக்குச் சிகிச்சையளிப்பதைவிட நோய்க்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து, அவற்றுக்குச் சிகிச்சையளிப்பதே மூலக்கூறு மருத்துவத்தின் முக்கியமான முன்னேற்றமாக இருக்கும்.
- மரபணு வரிசையாக்கம் எளிமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து, சிலர் இத்தகவல்களை சுய லாபத்திற்காகவோ அல்லது அரசியல் ஆதாயத்திற்காகவோ பயன்படுத்தக்கூடும்.
- காப்பீட்டு நிறுவனங்கள் தங்களுடைய எதிர்கால மருத்துவ செலவினங்களில் இருந்து காப்பாற்றிக் கொள்ள 'மரபிய கோளாறுகளையுடைய' மக்களுக்கு காப்பீடு வழங்குவதை மறுக்கலாம். 1
- சரியான இனத்தைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில்,மனித கூட்டத்திலுள்ள பலரிடம் இருந்து ஜீன்களைப் பெற்று இணைத்து இனவிருத்தி செய்ய தொடங்கிவிடுவார்களோ என்ற அச்சமும் உள்ளது.
- 2010வாக்கில் மனித ஜீனோம் திட்டம் நோய்களை ஏற்படுத்தும் 1800 மரபணுக்களை கண்டுபிடித்தது.

